REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 பெப்ரவரி 8 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
வரு. 92 இல. 34
Thursday 08, February, 2024
16பக்கங்கள்
50/-




# நாட்டின் நலன்களுக்காக பொதுவான ஒருமித்த கருத்துடன் இணையுங்கள்

## தனிப்பட்ட கனவுகளுக்காக அல்ல, நாட்டின் பொதுவான கனவை நனவாக்க புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம்

## கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி ரணில் அழைப்பு



### அரசியல் ஆதாயத்துக்காக நான் முடிவுகளை எடுக்கவில்லை. நாட்டின் நலனுக்காகவே எப்போதும் முடிவுகள் எடுத்தேன்

### விண்கல் வேகத்தில் சரிந்த நாட்டின் பொருளாதாரம் மீண்டும் ரொக்கெட் வேகத்தில் உயர்த்தப்பட்டது

### பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் மற்றும் கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான பாதையில் ஒரு மைல், கல்லாக இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மறுசீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்துக்காக அனைவரும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய முக்கியமான தருணம் வந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் ஆரம்பிக்கும் வேலைத் திட்டத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்தால் மாத்திரமே, இந்த வேலைத் திட்டத்தை மேலும் விரைவுபடுத்த முடியுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பதவிகளைப் பெற கனவு காணும் சிலர், நாட்டுக்கு பொய்யான கருத்துக்களை வெளியிடுவதாகவும் தெரிவித்தார்.

யதார்த்தத்தை புறக்கணித்து கனவுகளின் பாதையில் பயணித்தால் நாடு மீண்டும் பெரும் ஆபத்தில் தள்ளப்படுமென வலியுறுத்திய ஜனாதிபதி, பல்வேறு தனிப்பட்ட 06



# யதார்த்தத்தை புரிந்து எதிர்க்கட்சி செயற்பட வேண்டியது அவசியம்

### வங்குரோத்து நிலையை வெளிக் காட்டக் கூடாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வங்குரோத்து நிலையை வெளிப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சி செயற்படக்கூடாது. யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு செயல்படுவது அவசியமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் போது எதிர்க்கட்சி வெளிநடப்பு செய்தமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான சட்டங்களை நாம் உருவாக்கியுள்ளோம். அவற்றில் பெரும்பாலானவற்றை நடைமுறைப்படுத்தியும் உள்ளோம். இவற்றில் சில, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டவை. எத்தகைய பலம் உள்ளவர்களுக்கும் எதிராக 06

# சஜித் வெளியேறிய போதிலும் ஐ.ம.ச பிரபலங்கள் சபைக்குள்

### சுரேஸ், பைசல் காசிம், இஷாக், ஹரீஸ், பௌஸி, பொன்சேகா ஜனாதிபதியின் உரைக்கு செவிமடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்றத்தில் நேற்று ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை விளக்க உரையை ஆற்றிய போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, குமார வெல்கம, ராஜித சேனாரத்ன, இஷாக் ரகுமான், பைசல் காசிம், ஏ.எச்.எம். பௌஸி, வடிவேல் சுரேஷ் ஆகியோரும் அக் கட்சியில் சுயாதீனமாக செயற்படும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவும் அவர்களின் ஆசனங்களிலேயே அமர்ந்திருந்ததைக் காண முடிந்தது. எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு 06

# புற்றுநோய்க்கான மருந்துகளை அன்பளிக்கிறது அமெரிக்கா

### ஒரு வருடத்துக்கான 13 வகை மருந்துகளுக்கு ஒப்பந்தம்



புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நோக்கில் ஒரு வருடத்துக்கு தேவையான 13 வகையான அத்தியாவசிய மருந்துகளை அமெரிக்கா அன்பளிப்பு செய்யவுள்ளது. ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக (31கோடி 40 இலட்சம் ரூபா) பெறுமதியான மருந்து வகைகளையே அமெரிக்கா அன்பளிக்கவுள்ளது. இம் மருந்துகளை வழங்கும் ஒப்பந்தம் நேற்று (07) சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தலைமையில் அமைச்சில் 06

# ரூபா, 03 கோடி அம்பருடன் மூவர் கைது; 4.5 கிலோ மீட்பு



மிதக்கும் தங்கமென அழைக்கப்படும் 03 கோடிக்கும் அதிக பெறுமதியான 04 கிலோ 500 கிராம் எடையுள்ள அம்பருடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவு வழங்கிய தகவலின் படி கடந்த (06) செவ்வாய்க்கிழமை தெவிநுவர மற்றும் நகுலகமுவ பிரதேசங்களில் மிரிஸ்ஸ குற்றப் பிரிவு அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மொண்டேரோ ரக ஜீப் வண்டியில் சுமார் 03 கோடிக்கும் மேற்பட்ட 06

# நாட்டின் முன்னேற்றத்தை ஏற்க முடியாததாலே எதிர்க்கட்சி வெளிநடப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் படிப்படியான பொருளாதார முன்னேற்றம் மற்றும் அரசியல் நிலைமைகள் மூலம் எதிர்க்கட்சிக்கு எந்த இலாபமும் கிடையாது. இதனாலேயே, ஜனாதிபதியின் உரையை பகிஷ்கரித்து அவர்கள் வெளிநடப்புச் செய்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்து 06

### சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின்

# 5,000 ஏக்கர் காணி மூலம் 300 மில். டொலர் வருமானத்தை ஈட்டலாம்

### முதலீடு செய்யவுள்ள நிறுவனமும் தெரிவு



சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 5,000 ஏக்கர் காணியில் வருடாந்தம் 300 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டும் திட்டம் உள்ளதாகவும், அதற்காக முதலீடு செய்யத் தயாராக உள்ள 06

### சிறுவர், பெண்களுக்கு எதிராக

# பொது போக்குவரத்துகளில் பாலியல் துன்புறுத்தல்கள்

### தடுப்பதற்கு நேற்று முதல் பொலிஸ் தயார் நிலையில்



பொதுப் போக்குவரத்து சேவைகளில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக நாளாந்தம் பொலிஸ் நிலையங்களுக்கு தெரிவிக்கப்படும் 06

# பாகிஸ்தானில் தொடர் குண்டு வெடிப்புக்கள் 26 பேர் பலி, பலர் காயம்



பாகிஸ்தானில் நேற்று (07) இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்பில் 22 பேர் உயிரிழந்தனர். இன்று (08) பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே, இக்குண்டுகள் வெடித்துள்ளன. ஆப்கானிஸ்தானை அண்மித்துள்ள பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் இக்குண்டுகள் வெடித்தன. முதலாவது குண்டுத்தாக்குதல் சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளரை இலக்கு வைத்து நடத்தப்பட்டது. இதில் 16 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், இரண்டாவது குண்டு வெடிப்பு, ஜம்இய்யதுல் உலமா அலுவலகத்துக்கு அருகில் நடத்தப்பட்டது. இதில் 10 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் பிரபலங்களை இலக்கு வைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்புக்களும் உரிமை கோரவில்லை. (விரிவான செய்தி 16ம் பக்கம்)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் தனுஷ்கோடியில் நேற்று தஞ்சம்

**மன்னார் குறூப் நிருபர்**



ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து இலங்கையர் நேற்று அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சமடைந்தனர். இவர்களில் மூன்று குழந்தைகளும் உள்ளனர்.

தனுஸ்கோடியின் முதலாம் மணல் திட்டில் தஞ்சமடைந்த இவர்களை, மீட்ட பொலிஸார், அவர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா மாவட்டம் நெடுங்குழி பகுதியைச் சேர்ந்த நந்தகுமார் அவரது மனைவி 06

# யுக்திய: கைதான குடு ரொஷான் சகோதரர் பிணையில் விடுவிப்பு

'யுக்திய' நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குடு ரொஷான் மற்றும் அவரது சகோதரர் கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தால் இன்று கடுமையான பிணை நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். குடு ரொஷான் 03 கோடி ரூபா ரொக்கப் பிணையிலும், அவரது சகோதரர் 50 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டது. 06

# நெருக்கடியை சபித்துக் கொண்டிருப்பதால் அதிலிருந்து ஒருபோதும் மீள முடியாது!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை நேற்று ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை



ஆரம்பம் முதல் இன்று வரை உலகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. நாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்தன. தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடி ஏற்பட்டது.

சில சமயங்களில் நெருக்கடியிலிருந்து விடுபட முடிந்தது. வேறு சில சந்தர்ப்பங்களில், நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. நெருக்கடியைச் சபித்துக் கொண்டிருப்பதன் மூலம் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதன் மூலம் மீள முடியாது.

நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பதன் மூலம் தான் உலகமும் நாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகளைத் தீர்க்க முடிந்துள்ளது.

நெருக்கடி முகாமைத்துவத்தில் அடிப்படை என்னவாக இருக்க வேண்டும்?

புத்தபிரான் போதித்த ஒரு போதனையை இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"அத்ததீபா – விஹரத"

தங்களுக்குத் தாங்களே ஒளியாக வாழ வேண்டும்.

நெருக்கடியைச் சமாளிக்கும் செயல்முறை தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும். உலகில் எங்கும் ஏனையவர்களைக் குறைகூறி நெருக்கடியைச் சமாளித்தது கிடையாது.

எம்மை எமக்கான ஒளியாக மாற்றாவிட்டால், நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் சீர்செய்யாவிட்டால், நமக்கு நன்மை நடக்காது. நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. நெருக்கடிக்கும் தீர்வு இல்லை.

முறைமையில் மாற்றம் இருக்காவிட்டால் சிஸ்டம் சேஞ்ச் பற்றி தொண்டைக் கிழியக் கத்தினாலும் நாம் அடிப்படையில் இருந்து மாறாவிட்டால் முறைமையை மாற்ற எம்மால் முடியாது.

அதனைச் சுட்டிக் காட்டும் வகையில் கடந்த காலம் , நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய பல விடயங்களை இச்சபையில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

2022 பெப்ரவரியில் இந்த நாடு இருந்த நிலை, நம் அனைவருக்கும் நினைவில் இருக்கும். 2023 பெப்ரவரி மாதமளவில், இந்த நாட்டை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு வர முடிந்தது. இந்த வருடம் பெப்ரவரியாகும் போது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தை விட சிறந்த நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மற்றும் இந்த பெப்ரவரி வரையான நமது பொருளாதார குறிகாட்டிகள் சிலவற்றை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பணவீக்கம் 50.06 சதவீதமாக இருந்தது. இன்று அது 6.4சதவீதமாக குறைந்துள்ளது.

உணவுப் பணவீக்கம் 54.4 சதவீதமாக உள்ளது. இன்று அது 3.3 சதவீதமாக உள்ளது.

அன்று ஒரு டொலரின் பெறுமதி 363 ரூபாய். இன்று 314 ரூபாய்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், வரவு செலவுத் திட்ட முதன்மை பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமாக இருந்தது. ஆனால் 2023 இல் முதன்மை வரவு செலவுத் திட்டத்தில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான 76 வருடங்களில் இலங்கையானது முதன்மையான வரவு செலவுத் திட்ட உபரியை ஏற்படுத்திய 6 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவீதம் இருப்புப் பற்றாக்குறை காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், எங்களால் உபரியை ஏற்படுத்த முடிந்தது. 1977ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலுவைத் தொகை உபரியை ஏற்படுத்திய முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

2023 இல் 28 சதவீதமாக இருந்த வட்டி வீதம் தற்போது 12 சதவீதமாக உள்ளது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், 52 பிரதான அரச நிறுவனங்கள் 745 பில்லியன் ரூபா நட்டம் ஈட்டின. செப்டம்பர் 2023இற்குள், இந்த 52 நிறுவனங்களும் 313 பில்லியன் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளன. ஆனால் இந்நிறுவனங்கள் கடன் சுமையை தாங்க முடியாத நிறுவனங்களாக காணப்படுகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட கடனைச் செலுத்த முடியாத நிலையை 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அந்த சமயம் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியம் வரை சரிந்தது. தற்போது அந்த நிலை மாறிவிட்டது. 2023 டிசம்பர் நிலவரப்படி, நமது அந்நியச் செலாவணி கையிருப்பு 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

குறுகிய காலத்தில், சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். 2022 ஆம் ஆண்டில் நம் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 194,495 ஆகும். 2023 இல் அந்த எண்ணிக்கையை 1,487,303 ஆக அதிகரிக்க முடிந்தது. இந்த ஆண்டு ஜனவரியில் 200,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

மேலும், 2023இல் பல சாதகமான நகர்வுகளை முன்னெடுத்தோம். கோட்டா முறையில் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது தொடர்ந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறது. மீனவர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. வாகனங்கள் தவிர அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் இப்போது நீக்கப்பட்டுள்ளன. நாட்டுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. மேலும், உற்பத்தித் தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் விநியோக வலையமைப்பில் எந்தத் தடையும் இல்லை.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவீதமாக சுருங்கியது.2022 முதல், தொடர்ந்து 6 காலாண்டுகளில் எதிர்மறையாக இருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை எட்டினோம்.

நமது பொருளாதாரம் விண்கல் வேகத்தில் சரிந்தது. ஆனால் தற்போது எமக்கு அதனை மாற்ற முடிந்துள்ளது. அதை மீண்டும் ரொக்கெட் வேகத்தில் உயர்த்தியுள்ளோம். நாங்கள் வீ(V) வடிவ மீட்பு அல்லது வீ(V) வடிவ மீட்சியைப் பெற்று வருகிறோம்.

நாம் அடைந்த விசேடமான வெற்றியாக அதனைக் குறிப்பிடலாம். வீழ்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார மீட்சி மிகவும் கடினமானது மற்றும் வேதனையானது. ஆனால் ஏனைய நாடுகளைப் போல நீண்ட கால சிரமங்கள் மற்றும் வலிகள் இல்லாமல் நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

நான் ஒரு உதாரணத்தைக் கோடிட்டுக் காட்டுகிறேன்.

கிரேக்கம் கடன் செலுத்த முடியாமல் 2009ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. அதன் பின்னர் முழு நாடும் மிகவும் கடினமான சூழ்நிலையில் தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. அந்தக் காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்தித்தது. மீண்டும் அந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சுமார் 10 வருடங்கள் தேவைப்பட்டது.

நமது நாடு குறுகிய காலத்தில் இத்தகைய விதிவிலக்கான சாதனைகளை எட்டுவது உண்மையில் உலக சாதனையாகும். எங்களால் எப்படி அவ்வாறான சாதனைப் படைக்க முடிந்தது?

2022ஆம் ஆண்டு முழுவதும் பொருளாதாரம் சரிந்தது.2022 ஆம்ஆண்டை விட 2023இல் ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடிந்தது. இது தற்செயலாக நடந்ததல்ல. மிகவும் கவனமாகவும் தொலைநோக்குடனும் தயாரிக்கப்பட்ட நுட்பமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

மேலும், நாங்கள் தயாரிக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள், திட்டங்கள் அனைத்தையும் அவ்வப்போது நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். மக்கள் முன்னிலையிலும் அவ்வப்போது பகிரங்கமாக அறிவித்தேன். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவை பற்றி கலந்துரையாடவும் விவாதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்தக் கொள்கைகள் ஒருபோதும் மறைக்கப்படவில்லை. ஒவ்வொரு நடவடிக்கையையும் வெளிப்படைத்தன்மையுடன் செய்துள்ளோம்.

அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டு நலன் கருதியே எடுத்தேன். எமக்கு பாதகமாக இருந்தாலும் நாட்டுக்கு நன்மை பயக்கும் முடிவுகளை எடுக்க நாங்கள் தயங்கவில்லை. தனிப்பட்ட இலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்கு சரியான கொள்கைகளை செயற்படுத்தினோம்.

பாராளுமன்றத்திலுள்ள சில தரப்பினர் அந்த முடிவுகளை எதிர்த்தனர். ஆனால் பெரும்பான்மையானோர் தமது தனிப்பட்ட அரசியல் நலன்களையும் இலக்குகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் நலனுக்காக அந்த முடிவுகளுக்கு ஆதரவாக கையுயர்த்தினர். எதிர்காலத்தில் தேசத்தின் பாராட்டை அவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நாங்கள் இந்தப் பயணத்தில் படிப்படியாக முன்னேறிச் சென்றோம். 2022ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அன்றிருந்த நாட்டின் உண்மையான நிலைமையை நான் எடுத்துக் காட்டினேன். பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதே இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது. 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை நிலையான பாதைக்கு வழிநடத்தும் பல திட்டங்களை முன்வைத்தேன். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த தேவையான மறுசீரமைப்புகளின் ஆரம்ப கட்டமாக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

சிரமத்துடனும் சில சமயங்களில் தயக்கத்துடனும் நாங்கள் செயல்படுத்திய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் கொள்கைகள் காரணமாக, நாங்கள் தற்போது நிலையான பொருளாதாரத்தை நிறுவுவதற்கான பாதைக்கு பிரவேசித்திருக்கிறோம். அத்தோடு சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் இலக்குகள் மற்றும் பயணம் குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளன.

இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம் தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம் தற்போது ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டு மக்கள் பலர் நினைத்துப் பார்க்க முடியாத இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். மேலும் சிலர் தங்கள் வருமான வழிகளை இழந்தனர். சிலர்

## 'சிறந்த முகாமைத்துவம் மூலமே தீர்வுகளை எட்ட முடியும்'



தொழில் வாய்ப்புகளை இழந்தனர். இன்னும் சிலர் உரிமைகளை இழந்தனர். பெரும்பாலான துன்பங்கள் சாதாரண மக்களுக்குத்தான் சொந்தமானது.

இழந்த வாய்ப்புகளை கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு வழங்க தற்போது நாம் முயற்சிக்கிறோம். மக்களின் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் வேலைத் திட்டத்தை 'உரித்து' என்ற பெயரில் அண்மையில் ஆரம்பித்தோம். உரித்து வேலைத் திட்டத்தின் ஊடாக இரண்டு அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றோம். ஒன்று காணி மற்றது வீடு.

இங்கு காணி உரிமை பிரதான இடத்தைப் பெறுகிறது. 1897 தரிசு நிலச் சட்டத்தின் மூலம் மக்களின் காணி உரிமையை காலனித்துவப் பிரித்தானிய அரசு பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும், பறிக்கப்பட்ட காணி உரிமைகளை மக்களிடம் மீள வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த காணி உரிமையை மீள வழங்கும் பணியை நாம் ஆரம்பித்துள்ளோம். இரண்டு மில்லியன் மக்களை காணி உரிமையாளர்களாக எமது சமூகத்தில் இணைக்கின்றோம். இது வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த மற்றும் புரட்சிகரமான நகர்வாகும். அரிசியில் தன்னிறைவு பெற பல தசாப்தங்களாக விவசாயிகள் அனுபவித்த கடின உழைப்புக்கு வழங்கப்படும் ஒரு கௌரவமாகும்.

மேலும், இந்நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முறையான வருமானம் கிடையாது. பொருத்தமான வீடு இல்லை. இந்த மக்களுக்கு வருமான வழி மற்றும் வீட்டு உரிமை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். நகர்புர, குறைந்த வருமானமுடைய 50,000இற்கும் மேற்பட்டோருக்கு முழுமையான வீட்டுரிமை வழங்கப்படும்.

வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்திப் பாதையில் பயணிக்கும் போது நாட்டின் அனைத்துத் தரப்பினர் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக வறிய மற்றும் நிர்க்கதியான மக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் மக்கள் நலனுக்காக நடவடிக்கை எடுத்தோம்.

இந்த ஆண்டு அஸ்வெசும ஊடாக 24 இலட்சம் பேருக்கு நன்மைகள் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் கீழ் மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். நமது நாட்டின் வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை நிதி மானியம் வழங்கப்படவில்லை. வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா 20 கிலோ வீதம் அரிசி, நிவாரணமாக வழங்கப்படும்.

2022 ஓகஸ்ட் மாதமளவில், ஜனாதிபதி நிதியம் முற்றிலும் செயலிழந்தது.9,000இற்கும் மேற்பட்ட மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள், பணம் இல்லாமல் குவிந்திருந்தன. ஓகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேலும் 4,000 விண்ணப்பங்கள் வரை கிடைத்தன. அவை அனைத்திற்கும் பணம் செலுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 4,917 நோயாளர்களுக்கு 915 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. தற்போது பணம் செலுத்துவதற்கு பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மூன்று அல்லது ஐந்து வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அனைத்து மருத்துவ உதவிகளையும் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உதவித் தொகைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு நாம் விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்கினோம். ஓய்வூதியம் பெறுவோரின் சம்பளத்தை உயர்த்தினோம். 2016 முதல் 2020 வரை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு சம்பள முரண்பாடு உள்ளது. அந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் போது அதற்கு சமாந்தரமாக நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் அடைந்துவரும் வளர்ச்சி சமூகத்தில் பேசப்படும் தலைப்புகளில் பிரதிபலிக்கிறது. சில காலம் முன்பு மின்வெட்டினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி பேசினோம். அப்போது, எவ்வளவு கொடுத்தாலும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இன்று நாம் மின்சாரக் கட்டணத்தைப் பற்றி பேசுகிறோம். சில காலத்திற்கு முன்பு கறுப்புச் சந்தையில் ஒரு லீட்டர் பெட்ரோல் 3000 ரூபாவிற்கு வாங்கப்பட்டது குறித்து பேசப்பட்டது. எரிபொருள் வரிசைகளில் மூன்று அல்லது நான்கு நாட்கள் செலவிடுவது பற்றி பேசப்பட்டது. இன்று நாம் இலங்கையில் முதலீடு செய்யும் புதிய எரிபொருள் நிறுவனங்கள் பற்றி பேசுகிறோம். காய்கறி வாங்க வழியில்லை என்று பேசிக்கொண்டனர். இன்று ஒரு கரட்டின் விலை பற்றி பேசுகின்றனர். புத்தகம் அச்சடிக்க காகிதம் இருக்கவில்லை என்று அன்று கூறப்பட்டது. இன்று வற் வரி பற்றிப் பேசுகிறோம்.

ஆம். வற் வரி பலருக்கு சுமையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் உணராமல் இல்லை. அந்தப் பிரச்சினைக்கு நாம் படிப்படியாக தீர்வுகளை வழங்கி வருகிறோம். 2022 இல் 437,547 வரிக் கோப்புகள் இருந்தன.2023 இறுதியில் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 1,000,029 ஆக உயர்ந்துள்ளது. இது 130 சதவீத அதிகரிப்பு. வரி வலையமைப்பு விரிவடையும் போது, ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு நிறுவனத்திற்கோ ஏற்படும் வரிச் சுமை குறையும். மேலும், நமது பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதைத் தொடரும்போது, பொருளாதாரம் ஸ்திரமாகும்போது, வரிச்சுமையைக் குறைப்போம்.' வற்' வரியின் சதவீதத்தை திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

மலையளவு கடனைச் சுமந்துகொண்டுதான் இதையெல்லாம் செய்கிறோம். கடந்த காலம் முழுவதும் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை குறித்து மீள்திட்டத்தைத் தயாரிப்பதில் நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். முதல் கட்டமாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் நிறைவடைந்துள்ளது. இரண்டாவது கட்டமாக, வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் மறுசீரமைப்பு தொடர்பான கொள்கை ரீதியான உடன்பாடு எட்டப்பட்டது. தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்த சிக்கலான மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். இது நமது பொருளாதாரத்தை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கான அடிப்படையாக அமையும். மேலும் கடன் அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கான பாதையின் மையமாக இது மாறிவிட்டது.

IMF, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இந்த ஆண்டு 2% முதல் 3% பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று கணித்துள்ளன.2025இல் அதை 5 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நாட்டை மீட்பதற்கான பணிகளை நாம் ஆரம்பித்தோம். 2021 ஐ விட சில விடயங்களை 2022ஆம் ஆண்டு மேம்படுத்திக் கொண்டோம்.2022 ஐ விட 2023 எல்லா வகையிலும் மேம்படுத்திக் கொண்டோம். 2024 இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால், 2025 இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனால் அதில் மாத்திரம் திருப்தி அடைய முடியுமா?

வெளிநாடுகள் மற்றும் வெளி வணிக தளங்களில் இருந்து பெற்ற எந்த கடனையும் நாங்கள் இன்னும் செலுத்தவில்லை. ஆனால் மறுசீரமைப்புக்குப் பிறகு நாம் கடனைச் செலுத்தத் தொடங்க வேண்டும். கடனை மீளச் செலுத்த ரூபாவைப் போன்று டொலர்களும் எம்மிடம் இருக்க வேண்டும்.

2023 செப்டெம்பர் மாத மளவில் மொத்தக் கடன் 91 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது. இந்த கடன்களை செலுத்த நீண்ட காலம் அவசியப்படும். அதற்காக நாம் தேசிய மட்டத்தில் வருமானம் ஈட்ட வேண்டும். இல்லாவிட்டால் நாம் மீண்டும் கடன் பிடிக்குள் சிக்கிக்கொள்வோம்.

கடன் மறுசீரமைப்பு காரணமாக வருடமொன்றிற்காக நாம் செலுத்த வேண்டிய தொகையை குறைத்துக்கொள்ள முடியும். ஆனாலும் நாம் வருடத்திற்கு 3 பில்லியன் டொலர்கள் வரையில் செலுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு தொடர்ந்து கடனில் சிக்கியிருக்க முடியாது. அதேபோல் கடன் பெறவும் முடியாது.

அதேபோல் எமது வரவு செலவுக்கு இடையிலான சமநிலையை உருவாக்குவதற்கான துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எமது வரவு செலவு திட்ட துண்டுவிழும் தொகை பாரதூரமானது. இவ்வருடத்தில் 4,127 பில்லயன்களை அரசாங்கம் வருமானமாக ஈட்டியிருந்தாலும் அரசாங்கத்தின் செலவு 6,978 பில்லியன்களாக உள்ளது. அவற்றில் 2,651 பில்லியன்கள் கடனுக்கான வட்டியாக செலுத்துவதற்காகவே செலவிடப்படுகிறது. இதன்மூலம் எங்களின் கடன் சுமையை உணர முடியும்.

1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நாங்கள் தொடர்ந்து கடன் வாங்கிவந்துள்ளோம். எல்லாவற்றுக்கும் கடன் வாங்கியுள்ளோம். ஆட்சியாளர்களும் கடன் வாங்கப் பழகினர். மக்களும் இந்தக் கடன் பொருளாதாரத்துக்கு ஏற்றாற்போல் இசைவாக்கமடைந்தனர்.

அரிசி இலவசமாக வழங்கப்படும், மின் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும், சம்பளம் அதிகரிக்கப்படும், இலட்சக்கணக்கில் அரச வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறான தேர்தல் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்ததும் அவை கடன் பெற்று நிறைவேற்றப்பட்டன.இந்தக் கடன் மனப்பான்மையில் இருந்து விடுபட வேண்டும். கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபடாவிட்டால் இந்த நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. எதிர்காலம் ஒன்று இல்லாமல் போகும்.

எனவே கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு நமக்கான வலுவான பொருளாதாரத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.

இவற்றை அடைவதற்கு ஏற்றுமதி வருமானத்தையும், வெளிநாட்டு முதலீடுகளையும் விரைவாக அதிகரிப்பது இன்றியமையாதது. அதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்து, பல பொருளாதார சீர்திருத்தங்களை தற்போது செயல்படுத்தி வருகிறோம். போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது பிரதான எதிர்பார்ப்பாகும். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்க எதிர்பார்க்கிறோம்.ஊழலை ஒழித்தல் மற்றும் சமூக நவீனமயமாக்கல் என்பனவே இந்த செயல்முறையின் முக்கிய அம்சங்களாகும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

**'சிஸ்டம் சேஞ்ச் பற்றி தொண்டை கிழியக் கத்தினாலும் பயனில்லை. நாம் அடிப்படையில் இருந்து மாறாவிட்டால் முறைமையை மாற்ற எம்மால் முடியாது!'**

# அக்டோபரில் ஜனாதிபதி தேர்தல் ஜனாதிபதி ரணில் போட்டியிடுவார்

## அமைச்சர் ஹரீன் உறுதியாக தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும் என்றும் இத்தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்றும் சுற்றுலா மற்றும் இளைஞர், விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். ஒக்டோபர் 14 க்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக போட்டியிடுவார் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.



# சபாநாயகர் அனுமதியளித்தும் கெஹெலிய எம்பி, சபைக்கு வரவில்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும், அதனை அவர் நிராகரித்ததாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் 05 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக நேற்று (07) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவருக்கு அனுமதி வழங்கியிருந்தார்.

முன்னாள் அமைச்சரின் செயலாளர் ஒருவர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவருக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்கே சபாநாயகர் அனுமதி வழங்கியிருந்தார்.

இதையடுத்து பாராளுமன்ற படைக்கல சேவிதர் குஷான் ஜெயரத்தின, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருவதற்கான அழைப்பை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். முன்னாள் அமைச்சர் அனைத்து பாராளுமன்ற அமர்வுகளிலும் கலந்து கொள்ள முடியும்.

06

# கச்சதீவு உற்சவம் தீவிர ஏற்பாடுகள்

(யாழ் விசேட நிருபர்)

கச்சதீவு திருவிழாவுக்கான ஏற்பாடுகளை இலங்கை கடற்படையினர் முழு அளவில் முன்னெடுத்து வருகின்றனர். கச்சதீவின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட ஆயர் அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தலைமையில் பெருவிழாவின் பிரதான ஆராதனை நடைபெறவுள்ளது.பக்தர்களுக்கான வசதிகளை இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள், தற்காலிக தங்குமிடங்கள், இறங்குதுறைகள், மின்சார விநியோகம் உள்ளிட்ட வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தின் வர்ணப்பூச்சு வேலைகள், பழுதுபார்த்தல், சுற்றுப்புற பகுதிகள் மற்றும் ஆலயத்துக்கு செல்லும் பாதைகளை சுத்தம் செய்தல் ஆகியவற்றையும் கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

திருவிழாவுக்கு செல்லும் இலங்கை பக்தர்களுக்காக படகுச் சேவைகள் குறிகாட்டுவான் மற்றும் நெடுந்தீவு இறங்குதுறையிலிருந்து ஆரம்பமாகவுள்ளன.

பெலியத்த ஐவர் படுகொலை

# சரணடைந்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது

பெலியத்தயில் ஐவர், படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலுமொரு சந்தேக நபர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணியூடாக பெலியத்த பொலிஸில் சரணடைந்த இவரை செவ்வாய்க்கிழமை (06) மாலை பொலிஸார் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்ட நபர் அக்குரஸ்ஸ இம்புல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளை கம்புறுபிட்டிய பிரதேசத்திலுள்ள தனது பாட்டியின் வீட்டில் மறைத்து வைத்து, பின்னர் கம்புறுபிட்டியவிலிருந்து கராப்பிட்டிய பிரதேசத்துக்கு துப்பாக்கிகளை எடுத்துச் செல்வதற்கு உதவிய சந்தேக நபரே, சரணடைந்தபோது கைதான வராவார்.

இந்நபர் நேற்று புதன்கிழமை (07) தங்காலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதேவேளை, பெலியத்தயில் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புள்ள பிரதான சூத்திரதாரி உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்டவர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# ஜே.வி.பியின் இந்திய விஜயம்: முதலீடுகளுக்கு வாய்ப்புகள்



இந்திய எதிர்ப்பு கொள்கையை கடந்த காலங்களில் பின்பற்றிய ஜே வி பி யின் இந்திய விஜயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.


06

# தினக்குரல் ஊடகவியலாளரின் தந்தை காலமானார்



தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளர் ந.ஜெயகாந்தனின் தந்தையார் சின்னசாமி நல்லுசாமி (77 வயது) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 144/18, கொழும்பு வீதி, எட்டியாந்தோட்டை (கொமாடுவ) இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இறுதிக் கிரியையின் பின்னர் கொமாடுவ மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படவுள்ளது.அன்னார் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 27

குறள் தரும் சிந்தனை



விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி

கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும்,
மழைநீர் பொய்த்து விட்டால் பசியின்
கொடுமை வாட்டி வதைக்கும்.

# சரியான தலைமைத்துவத்தினால் பொருளாதார முன்னேற்றம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கொள்கை விளக்க உரையின் ஊடாக நேற்று தொடக்கி வைக்கப்பட்டது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க உரையாகும்.

அதாவது 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இந்நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதன் ஊடாக நாட்டின் அரசியலும் கொதி நிலையை அடைந்து அன்றைய அரசாங்கமும் ஜனாதிபதியும் கூட பதவி விலகும் நிலை உருவானது.

இந்நெருக்கடியான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்று மக்கள் முகம்கொடுத்துள்ள நெருக்கடிகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க எவரும் முன்வராத நிலைமை ஏற்பட்டது.

அவ்வாறான சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் முன்வந்து நாட்டின் தலைமையை ஏற்றார். இந்நாட்டின் பாராளுமன்ற அரசியலில் சுமார் ஐந்து தசாப்த கால அனுபவத்தைக் கொண்டுள்ள தற்போதைய ஜனாதிபதி, இந்நாட்டின் பிரதமர் பதவியை ஐந்து தடவைகள் வகித்துள்ளார். இவற்றின் ஊடாகப் பெற்றுள்ள பரந்த அனுபவம் மற்றும் அறிவின் பின்புலத்தைக் கொண்டு நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை துரிதமாக மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்கள் யாவும் நாட்டு நலன்களை முன்னிலைப்படுத்தியவையாகும்.

எந்தவொரு வேலைத்திட்டமும் அரசியல் இலாபம் பெறும் நோக்கிலோ, கட்சி நலன்களை அடிப்படையாகக் கொண்டோ முன்னெடுக்கப்பட்டதாக இல்லை. கட்சி நலன்களுக்கு பாதகமான போதிலும் கூட நாட்டு நலன்களுக்கு முன்னுரிமை அளித்துத்தான் அனைத்து முடிவுகள் எடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. அனைத்து வேலைத்திட்டங்களும் வெளிப்படைத்தன்மை கொண்டவையாகும். அதனால் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்படக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

இவ்வேலைத்திட்டங்களின் பயனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவாகவும் வேகமாகவும் நாட்டினால் மீட்சி பெற முடிந்தது.

ஆனால் உலகில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான வேறு எந்த நாட்டினாலும் இவ்வாறு விரைவாக மீட்சி பெற முடியவில்லை.

கிரேக்கம் 2009 இல் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அந்நாடு பொருளாதார மீட்சி பெறுவதற்கு 10 ஆண்டுகள் சென்றன. ஆனால் இலங்கைக்கு அவ்வாறான நீண்ட காலப்பகுதி பொருளாதார மீட்சிக்கு தேவைப்படவில்லை. அதற்கான ஜனாதிபதி முன்னெடுத்த வெளிப்படைத்தன்மை மிக்க பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களே காரணமாக அமைந்துள்ளன.

2022 பெப்ரவரியில் இந்நாடு இருந்த நிலையை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் 2023 பெப்ரவரி மாதமளவில், இந்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டுவர முடிந்தது. இவ்வருடம் பெப்ரவரியாகும் போது கடந்தாண்டு பெப்ரவரி மாதத்தை விட சிறந்த நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது. குறிப்பாக கடந்தாண்டு 50.06 சதவீதமாக இருந்த பணவீக்கம், இன்று 6.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 54.4 சதவீதத்தில் இருந்து இன்று 3.3 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. டொலரின் பெறுமதி 363 ரூபாயிலிருந்து இன்று 314 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. 2023 இல் 28 சதவீதமாக இருந்த வட்டி வீதம் தற்போது 12 சதவீதமாகக் காணப்படுகிறது.

தெரிவுசெய்யப்பட்ட கடனைச் செலுத்த முடியாத நிலையை 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்ததோடு, அந்நிய செலாவணி கையிருப்பு பூஜ்ஜியம் வரை சரிந்தது. ஆனால் 2023 டிசம்பர் நிலைவரப்படி, இந்நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகிறது.

அதேநேரம் 2022 ஆம் ஆண்டில் 194,495 ஆகக் காணப்பட்ட இந்நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, 2023 இல் 1,487,303 பேர் வரை அதிகரித்திருந்தது. இவ்வருடம் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 200,000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு பாரிய பொருளாதார அடைவுகளை நாடு அடைந்து கொண்டுள்ளது. இதற்கு நாட்டுக்கு அளிக்கப்படும் சரியான தலைமைத்துவமும் வெளிப்படைத்தன்மையுடனான வேலைத்திட்டங்களும்தான் அடிப்படைக் காரணம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதி தமது கொள்கை விளக்க உரையின் போது, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய முக்கியமான தருணம் இது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகவே நாட்டைக் கட்டியெழுப்புக்காக கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு செயற்படுவது மிகவும் அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# நிகழ்நிலை காப்பு சட்டமூலம் உயர்நீதிமன்ற தீர்ப்பை மீறி நிறைவேற்றப்பட்டதாகத் தவறான அறிக்கைகள்

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து அச்சட்டம் இயற்றப்பட்டமை தொடர்பான தவறான தகவல்களைத் திருத்தி உண்மையினைத் தெளிவுபடுத்துவதற்காகப் பொதுமக்களின் நலன் கருதி இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காகவும் அவர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுப்பதற்காகவும் சட்டமியற்றல் செயன்முறை ஆரம்பத்தில் இருந்து விளக்கப்படுகின்றது.

சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகையில், அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அச்சட்டமூலத்தினை உயர்நீதிமன்றத்தின் முன் சவாலுக்குட்படுத்துவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம், உயர்நீதிமன்றம் அவற்றினைப் பரிசீலித்த பின்னர், சம்பந்தப்பட்ட தீர்ப்பு சபாநாயகருக்கு மூன்று வாரங்களினுள் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன் பின்னர், அடுத்து வரும் பாராளுமன்ற அமர்வின் முதலாம் நாளன்று சம்பந்தப்பட்ட அத்தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் கட்டாயம் அறிவிக்க வேண்டும் என்பதுடன் முழுமையான தீர்ப்பு அன்றைய நாளுக்கான ஹன்சாட் அதிகார அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும் என அவர் கட்டளையிடவும் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட செயன்முறையினைத் தொடர்ந்து, 2023 ஒக்டோபர் 03 அன்று நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்தினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர், உயர்நீதிமன்றத் தீர்ப்பினை 2023 நவம்பர் 07 அன்று பாராளுமன்றத்தில் வாசித்த சபாநாயகர், அத்தீர்ப்பு அன்றைய நாளுக்கான ஹன்சாட் அதிகார அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டார். அதன் பின்னர், ஆர்வமுள்ள எத்தரப்பினாலும் அணுகக் கூடிய விதத்தில் அது ஒரு பகிரங்க ஆவணமாக மாறியது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், சம்பந்தப்பட்ட அமைச்சு (இந்த விடயத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு) சட்ட வரைஞர் திணைக்களத்தின் உதவியுடன் உத்தேச திருத்தங்களை ஒருங்கிணைக்கின்றது. இத்திருத்தங்களை ஒருங்கிணைப்பது, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைவாக, அரசியலமைப்புடன் பொருந்தும் வகையில், சட்டமூலத்தினைச் சமர்ப்பித்த தரப்பினால் நிறைவேற்றப்படுகின்றது. திருத்தங்கள் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மும்மொழிகளிலும் விநியோகிக்கப்படுகின்றன.

இதே செயன்முறை நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்திற்கும் பின்பற்றப்பட்டதுடன், இச்சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதத்தின் முதலாம் நாளான 2024 சனவரி 23 அன்று காலையில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் திருத்தங்கள் மும்மொழிகளிலும் விநியோகிக்கப்பட்டன.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டதுடன், குழு நிலையானது இரண்டாம் நாளான 2024 சனவரி 24, பி.ப. 5.00 மணிக்கு ஆரம்பமானது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட திருத்தங்களின் பட்டியலின்

## பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் சபாநாயகர் அலுவலகம்



பிரகாரம், ஒவ்வொரு திருத்தத்தினையும் நிறைவேற்றுவதற்காக அதனை வாசகம் வாசகமாகச் சபாநாயகர் சபையில் சமர்ப்பித்தார். அச்சந்தர்ப்பத்தில், சட்டத்துறைத் தலைமையதிபதியினைப் பிரதிநிதித்துவம் செய்து பாராளுமன்றத்தில் அரசாங்க அதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூடத்தில் சமுகமளித்திருந்த மேலதிக மன்றாடியார் நாயகம், உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு அமைவாகச் சகல கட்டாயமான திருத்தங்களும் குழுநிலையின் போது திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன என்பதைச் சபாநாயகருக்கு அறிவித்தார்.

இச்சந்தர்ப்பதில் எம். ஏ. சுமந்திரன் எம்.பி சில கரிசணைகளை எழுப்பிய சந்தர்ப்பத்தில், இது தொடர்பாகக் கௌரவ உறுப்பினருக்கு மேலும் விளக்குமாறு மேலதிக மன்றாடியார் நாயகத்தினைச் சபாநாயகர் வேண்டியமைக்கு மேலதிக மன்றாடியார் நாயகம் இயைபுற்றார்.

குழுநிலையின் போது குறிப்பிட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட்ட பின்னர், இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் எந்தச் சட்டமூலத்திற்கும் ஏற்புடையதான செயன்முறையின் பிரகாரம் நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மூன்றாம் மதிப்பீட்டின் பின்னர் பாராளுமன்றத்தில் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினால் வழிகாட்டப்பட்டவாறாக, இந்தத் திருத்தங்கள் அரசியலமைப்புடன் பொருந்துகின்றன எனும் சான்றறிவிப்பினைச் சட்டத்துறைத் தலைமையதிபதி வழங்கினார்.

இந்த ஒட்டுமொத்தச் செயன்முறையின் போதும், உயர்நீதிமன்றம் உள்ளிட்ட எந்த ஒரு தரப்பினாலும் எந்தத் திருத்தத்தினையும் / திருத்தங்களையும் மற்றும் / அல்லது விதப்புரையினையும் / விதப்புரைகளையும் முன்மொழிவதற்கோ, ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ சபாநாயகருக்கு எவ்விதமான வகிபாத்திரமோ அல்லது அதிகாரமோ இல்லை என்பதுடன், இங்கே இவ்வாறான செயற்பாட்டிற்கான முழு அதிகாரமும் பாராளுமன்றச் சபையிடம், அதாவது, உறுப்பினர்களிடமே, பொதுவாக பெரும்பான்மை வாக்குகளுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சட்டமூலமொன்று உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதும், அரசியலமைப்பின் 79 ஆம் மற்றும் 80 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் அச்சட்டமூலத்திற்கான சான்றறிவிப்பினை அங்கீகரிப்பதற்குச் சபாநாயகர் கடப்படுத்தப்பட்டுள்ளார். இதன் பிரகாரம், 2024 பெப்ரவரி 02 அன்று நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்திற்கான சான்றறிவிப்பினைச் சபாநாயகர் அங்கீகரித்து அதனை, 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக ஆக்கினார்.

எனவே, சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவாறாக, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது என்பதைச் சபாநாயகரின் அலுவலகம் வாக்குமூலமாகத் தெரிவிக்கின்றது. பாராளுமன்றத்தின் சட்டவாக்கச் செயன்முறை சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களத்துடனும் சட்ட வரைஞர் திணைக்களத்துடனும் சேர்ந்து கூட்டாக இடம்பெறுவதால் சட்டமூலம் ஒன்று தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு முரணான விதத்திலோ அல்லது அரசியலமைப்பினை மீறும் விதத்திலோ செயற்படுவதற்கு வாய்ப்பில்லை.

இச்செயன்முறையினை நன்கறிந்திருக்க வேண்டியவர்களே வேறு விதமாக இது பற்றிக் குறிப்பிடுவது மனம் வருந்தத்தக்கது என்பதுடன் சபாநாயகர் அவரின் தற்றுணிபுக்கு ஏற்பச் சட்டங்களை இயற்றலாம் மேலும் சட்டமூலங்களுக்குத் திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்கின்ற அவர்களின் மறைமுகக் குறிப்பீடுகள் அவர்களுக் கேயுரிய சட்ட அறிவிக்கும் அரசியலமைப்பு அறிவுக்கும் இழுக்கானதாகும்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களுடன் இயைபுறுவதை உறுதிப்படுத்துவதற்கு இறுதிக் குழுநிலையின் போது சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களம் சமுகமளிப்பதற்கு (2017 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் முதல்) எந்த உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதம் போதிய ஆதாரமாக இருந்ததோ அந்த உறுப்பினர்களின் உளச்சான்றில் முன்னேற்றத்தினைக் காண்பது ஊக்கமளித்தாலும், என்னென்ன விதப்புரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதைச் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் கூறினால், மேலே விளக்கப்பட்டவாறு இவ்வாறான விடயங்களில் சபாநாயகருக்கு தற்றுணிபு இல்லை என்கின்ற காரணத்தினால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இயலுமாக இருக்கும்.

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்பு சட்டத்தினை நிறைவேற்றியமை தொடர்பிலான சகல ஆவணங்களையும் நடவடிக்கைமுறைகளையும் எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் வந்து ஆராயுமாறும் விடயங்களைச் சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்காக விடயத்தில் அறிவுடைய அதிகாரிகளைக் கலந்தாலோசிக்குமாறும் அழைக்கப்படுகின்றனர்.

ஒரு சனநாயக முறைமையில் சட்டவாக்கத்திற்கு அபகீர்த்தியினை ஏற்படுத்துவதோ அல்லது அதன் நம்பகத்தன்மையினைக் கீழறுப்பதோ நன்மை பயக்கும் ஓர் உபாய மார்க்கமல்ல. சனநாயக முறைமையில் ஒட்டுமொத்த மதிப்பீடும் சட்டவாக்கம் உள்ளிட்ட சகல பாகங்களினதும் கூட்டுச் செயற்பாட்டினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதைச் சகல உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் அலுவலகம் மீண்டும் நினைவூட்ட விரும்புகின்றது.

எச்.ஈ.ஜனகாந்த சில்வா...
பணிப்பாளர் சட்டவாக்க சேவைகள்/
பணிப்பாளர் தொடர்பாடல் (பதில்)
இலங்கை பாராளுமன்றம்

# Superior Engagement Award வென்ற ஓட்டமாவடி யஸீர் அறபாத்



நீதியான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டமைப்பு (PAFFREL) ஏற்பாடு செய்த இலங்கையில் 'ஜனநாயக ஆட்சிப்பரப்பில் மக்கள் செயற்படும் இயலுமையை உருவாக்கல்' இளைஞர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நோக்காகக் கொண்ட கற்கைநெறி மற்றும் சமூக வலைத்தளப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு_07 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக்கல்லூரி வளாகத்தில் (SLFI) இடம்பெற்றது.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் போனி ஹார்பாக் தலைமையில் இடம்பெற்ற தேசிய நிகழ்வில் அரச திணைக்கள உயரதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள், கல்வியியலாளர்கள், ஜனநாயக கல்விக்கூடத்தின் இளைஞர், யுவதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். குறித்த நிகழ்வில் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட' ஜனநாயகம் எமது மொழியில்' எனும் தொனிப்பொருளில் சமூக ஊடகம் வாயிலான தமிழ்மொழி எழுத்துப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடியைச் சேர்ந்த இளங்கலைமாணி பட்டதாரியான எம்.என்.முஹம்மது யஸீர் அறபாத் போட்டியில் பங்குபற்றியதற்கான சான்றிதழ், போட்டியில் இறுதி செய்யப்பட்டோர் பட்டியலில் தனது சமூக ஊடகப்பதிவு இடம்பிடித்தமைக்கான பதக்கம் என்பவற்றோடு, வெற்றியாளருக்கான Superior Engagement Award உயர்விருதினையும் வெற்றி கொண்டு 150,000 ரூபா பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டார்.

குறித்த நிகழ்வில் வெற்றியாளராக பெயர் அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், உயர்விருதினைப் பெற மேடைக்கு வருகை தந்த போது, தற்போது பலஸ்தீன காஸா மக்கள் எதிர்கொண்டுள்ள துயரங்களை நினைபடுத்தவும் சுதந்திர பலஸ்தீனை ஆதரித்தும் பலஸ்தீன சால்வை அணிந்து, பலஸ்தீன உணர்வை யஸீர் அறபாத் வெளிப்படுத்தியிருந்தார்.

# மஸ்ஜிதுந் நபவியும், கல்விப் பணிகளும்



மக்காவில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் ஹராமுக்கு அடுத்ததாக சிறப்பிலும் அந்தஸ்திலும் மிக உயர்ந்தது மஸ்ஜிதுந் நபவியாகும். ஹிஜ்ரி முதலாம் ஆண்டு இஸ்லாமிய ஆட்சி மதினாவில் ஆரம்பமானதையடுத்து முஸ்லிம்களுக்கென்று தனித்துவமாக அமைக்கப்பட்ட இரண்டாவது பள்ளிவாசல் இதுவாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலம் முதல் இன்று வரை மஸ்ஜிதுந் நபவி இத்துறையில் தனித்துவம் வகிக்கின்றது. பெரும் பெரும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை உருவாக்கி இஸ்லாமிய மார்க்கத்துக்கு மாபெரும் பங்களிப்பினை வழங்கி தனது சேவைகளை தொடர்ந்து கொண்டே இருக்கிறது மஸ்ஜிதுந் நபவி.

வணக்க வழிபாடுகளுக்கு அடுத்ததாக கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளில் மாபெரும் பங்கினை ஆற்றும் மஸ்ஜிதுந் நபவியானது பிரமாண்டமான பொது நூலகம் ஒன்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நூலகமானது 1933 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சராக கடமையாற்றிய நஸ்ஸார் அபீத் அல்மதனி என்பவரின் ஆலோசனைக்கிணங்க மன்னர்



அப்துல் அஸீஸ் ஆலுஸுஊத் அவர்களின் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இதன் முதல் நிருவாக பொறுப்பாலராக யாஸீன் அல்கியாரி என்பவர் நியமிக்கப்பட்டார்.

மஸ்ஜிதுந் நபவி நூலகம் என்றழைக்கப்படும் இப்பொது நூலகத்தின் தற்போதய நிருவாகத் தலைவரான ரஷீத் முஸ்இத் அர்ரபீஈ என்பவர் இதைப்பற்றி கூறும் போது இந் நூலகமானது 744 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளதுடன், 172,548 இற்கும் அதிகமான நூல்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்றார்.

மேலும் இநநூலகமானது உலக முஸ்லிம்களுக்கென 24 மணித்தியாலமும் இயங்கி வருகிறது. நீண்ட நேர வாசிப்புக்கான பிரிவு, கணினிப் பிரிவு, அரியவகை நூல்களுக்கான பிரிவு, போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான பிரிவு, மொழிப் பிரிவு போன்ற பல பிரிவுகளாக இந்நூலகம் வகைப்படுத்தப்பட்டு தனது சேவைகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

மேலும் மஸ்ஜிதுந் நபவி நூலகத்தின் கணினிப் பிரிவானது இந்நூலகத்தில் காணப்படும் 172,548 இற்கும் மேற்பட்ட நூல்களை Pdf வடிவிலும், ஒலி வடிவிலும் வடிவமைத்து தனது சேவையை வழங்கி வருவதுடன் பல உயர் நவீன சேவைகளையும் அறிமுகப்படுத்தவுள்ளதாக இதன் நிருவாக பொறுப்புதாரி ரஷீத் முஸ்இத் அர்ரபீஈ தெரிவித்தார்.

இக்கல்லூரியானது 2010 செப்டம்பர் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ஆண் மாணவர்களுக்கான பிரிவு, பெண் மாணவிகளுக்கான பிரிவு என இருபாலாரும் கல்வி கற்கும் வகையில் இயங்கி வருகிறது.

ஷரீஆ, அல்குர்ஆன், ஹதீஸ், அகீதா, மொழி என ஐந்து பிரிவுகளைக் கொண்ட இக்கல்லூரியானது மன்னர் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மது இப்னு சல்மான் ஆகியோரின் கண்காணிப்பிலும், சவுதி அரேபியாவின் முழு நிதியிலும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மஸ்ஜிதுந் நபவி கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 840 சவுதி ரியால்கள் கொடுப்பனவாக வழங்கப்படுவதுடன், இதில் நான்கு வருட பட்டப்படிப்பினை முடித்து வெளியேறும் மாணவர்கள் கலைமாணி பட்டம் மற்றும் சான்றிதழ்களை பெற்றுக்கொள்கின்றனர்.

இக்கல்லூரியில் சேர்வதற்கான நிபந்தனைகளாக :

1. ஐந்து வருடங்களுக்குட்பட்ட க.பொ.த உயர் தரப் பரீட்சைச் சான்றிதல்.

2. குறைந்த பட்சம் அல்குர்ஆனில் 5 ஜுஷ்களை மனனம் செய்திருத்தல்.

3. சவுதி அரேபியா நாட்டை சேர்ந்தவர் அல்லது சவுதி அரேபியாவில் வசிக்கக்கூடிய ஒருவராக இருத்தல் போன்றவை காணப்படுகின்றன.

இம்மாபெரும் சேவைகளுக்காக பெரும் நிதியுதவிகளையும், பங்களிப்புகளையும் செய்து வரும் சவுதி நாட்டு மன்னரான சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசரான முஹம்மத் இப்னு சல்மான் ஆகியோரை பலரும் பாராட்டி வருகின்றனர்.

கலாநிதி இஸ்மாயில் மதனி...

# 9ஆவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் நிகழ்வுகள்











## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **20/02/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு
விக்டோரி கட்டடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹுவ வீதி, நிக்கவரட்டி
இல.42, விஜேசிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **21/02/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.337E, நலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரண வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரண.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.108/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவல.

திகதி : **22/02/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொட.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமண்டஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டடம், கீழ் வீதி, திஸ்ஸமஹாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி.
இல.186, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
SINGER FINANCE
இல. 498, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.



## விசேட அறிவித்தல்

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு,

மக்கள் வங்கியின் பரிவர்த்தனைகள் தொடர்பான சேவைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கவென மக்களை ஏமாற்றி கணக்கு விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் ஒருசில குழுவினர் பல மோசடிகளை மேற்கொண்டு வருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

மக்கள் வங்கியில் கணக்குகளைத் திறக்கவோ அல்லது வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்ளவோ மூன்றாம் தரப்பினரோடு எச்சந்தர்ப்பத்திலும் மக்கள் வங்கி தொடர்புகளை பேணாது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

எனவே உங்கள் தனிப்பட்ட வங்கித் தகவல்கள் அதாவது கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சொல், பயனாளர் பெயர், OTP இலக்கம் மற்றும் தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் பரிமாறிக் கொள்ள வேண்டாம் என தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation



දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

## பந்தய நிலையங்களைப் பதிவுசெய்தல்

2024 பெப்ரவரி 01 முதல் செயல்வலுப்பெறும் வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான பதிவுச் சான்றிதழ் ஒவ்வொரு பந்தய நிலையத்திலும் காணப்படுதல் வேண்டும்

### பதிவு உறுதிபாட்டுச் சான்றிதழ் பெறப்படவில்லை எனில்

- பதிவுச் சான்றிதழை கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ காடினியர் மாவத்தையில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 11 ஆம் மாடியிலுள்ள முத்திரை தீர்வை மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
(தொடர்பு இலக்கங்கள் 0112135171 & 0112135172)

### பதிவு எதுவும் பெறப்படவில்லை எனில்,

- 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கு 2022 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் பதிவுசெய்யாத பந்தய நிலையங்களை மூடுவதற்கு பொலிஸ்மா அதிபர் நடவடிக்கைகள் எடுப்பார்.

ஆகவே, பந்தய நிலையங்களானது, தடையற்ற செயற்பாட்டிற்கு முறையாக பதிவுசெய்யப்பட்டு, பதிவுச் சான்றிதழை பந்தய நிலையத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

# பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை

உள்நாட்டு மற்றும் பலதரப்பு கடனை திருப்பிச் செலுத்துவதற்காக 727 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மூலதனச் செலவுடன் ரூ. 8,898 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதன்படி திறைசேரியிலிருந்து வெளியேறிய தொகை 13,392 பில்லியன் ரூபாவாகும். இதன்படி கடந்த ஆண்டு சுமார் 10 ஆயிரம் டிரிலியன் கடனாக அரசு பெற்றுள்ளது. இந் நிலைமையை அடிப்படையாக வைத்து அரச அதிகாரத்தைப் பெறுவது பற்றி யாராவது பேசினால், இந்த எண்ணிக்கைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பெரும்பான்மையான நிர்மாணங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. நெடுஞ்சாலைகள், பாலங்கள் போன்றவற்றின் கட்டுமானப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. கடனை திருப்பிச் செலுத்தும் உடன்படிக்கை எட்டப்படும் வரை எந்தவொரு வெளிநாட்டு நாடும் அல்லது அமைப்பும் இலங்கைக்கு எந்தவொரு கடன் உதவியையும் வழங்காது. கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அனைத்து நாடுகளுடனும் பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. மார்ச் ஏப்ரல் மாதத்துக்குள் நிறைவு பெறும் என நம்புகிறேன்.

நாட்டின் ஜனாதிபதியாக யார் வந்தாலும் சரி, யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி, பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வு இல்லை. பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுப்பதன் மூலம் முறையாக தயாரிக்கப்பட்ட பணி ஒழுங்குமுறையின்படி செயல்படுவதன் மூலம் மட்டுமே அதற்கான தீர்வு கிடைக்கும்.

2027 க்குள் ஏற்படக்கூடிய வெளிநாட்டு வள இடைவெளி 3,911 பில்லியன் அமெரிக்க டொலர். அதைத் தீர்க்க, சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் 329 பில்லியன், 2027 வரவு செலவுத் திட்டத்துக்கான சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 600 பில்லியன், உலக வங்கியிலிருந்து 300 பில்லியன், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 300 பில்லியன் மற்றும் கடன் மறுசீரமைப்பிலிருந்து 1,428 பில்லியன் இதன்படி, 2027 ஆம் ஆண்டில் 1,500 மில்லியன் பற்றாக்குறைக்கு சர்வதேச சந்தையில் 1,500 இறையாண்மை பத்திரம் மூலம் பெற முடியும். அந்த நேரத்தில், சர்வதேச கையிருப்பு 14 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இருக்க வேண்டும்.




## நிர்வாகத் தலைவராக நியமனம்



ஹெம்மாதகம ஹிஜ்ராகமையில் அமைந்துள்ள மாற்றுத்திறன் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கு சேவை செய்யும் தொண்டு நிறுவனமான SECDA அமைப்பின் நிர்வாகத் தலைவராக எம்.ஜே.எம். நய்முதீன் நியமிக்கப்பட்டுள்ளார். பதுரிய்யா பாடசாலையின் முன்னாள் அதிபராகவும் ஹெம்மாதகம HEDS பிரதேச கல்வி அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும் HMF MEDIA FOURM ஆலோசகராகவும் இவர் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## நாட்டின் நலன்களுக்காக...

நலன்களுக்காக நாடு பற்றிய பொறுப்பைப் புறக்கணித்தால் வரலாறு எம்மை துரோகிகளென பெயரிடுமெனவும் சுட்டிக் காட்டினார். ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை நேற்று (07) ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார். பாராளுமன்ற வளாகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை பிரதமர் தினேஷ் குணவர்தன, சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த் மற்றும் ஆளும் கட்சி பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் வரவேற்றனர். இதன் போது, பாராளுமன்ற பிரதான வாயில் முன்பாக பாடசாலை மாணவிகள் ஜயமங்கல கீதம் பாடினர்.

படைக்கல சேவிதர், பிரதி படைக்கல சேவிதர், சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம் உள்ளிட்டோர் புடைசூழ பாராளுமன்ற அவைக்குள் பிரவேசித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார். ஜனாதிபதியின் முழுமையான உரை 2 மற்றும் 8ம் பக்கங்களில்.

## பொது போக்குவரத்துகளில்...

முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கமைய நேற்று 07ஆம் திகதி நாடளாவிய ரீதியில் விசேட நடவடிக்கையொன்று அமுல்படுத்தப்படுகிறது.இந்த நடவடிக்கையின் மூலம், பொதுப் போக்குவரத்துச் சேவைகளை பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் போது காலை 8.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் 07.00 மணி வரையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிக முன்னுரிமை அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சஜித் வெளியேறிய...

வெளிநடப்பு செய்ததுடன் உத்தரலங்கா சபையிலிருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்து வரும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் எம் பியும் அதில் உள்ளடங்குவார்.

எதிர்க்கட்சியினர் அவ்வாறு சபையிலிருந்து வெளியேறிய போது ஜனாதிபதி தொடர்ந்தும் தமது கொள்கை விளக்க உரையை ஆற்றினார். ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஜனாதிபதியின் உரைக்கு கவனம் செலுத்தினர்.அச்சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க 'அமர்ந்திருந்து உரையை கேளுங்கள் ' என வெளியே சென்றவர்களிடம் கூறினார். அச்சமயம் அமைதியாக இருக்குமாறு, அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சருக்கு வலியுறுத்தினர். அச்சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர சுதந்திர மக்கள் சபையின் இணைப்பாளர் டலஸ் அழகப்பெரும, அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர் குழு,தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ,தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட சிலரும் சபையில் அமர்ந்திருந்தனர். விமல் வீரவன்ச, அத்துரலியே ரத்ன தேரர் ஆகியோரும் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

## யதார்த்தத்தை புரிந்து...

சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். அந்த வகையில் பாராளுமன்றத்தில் ஊழல் மோசடி சட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டிய எதிர்க் கட்சியே அதற்கு எதிராக செயற்பட்டுள்ளது.

குறுகிய காலத்துக்குள் பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளோம் என்பதை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.அந்த வகையில் வங்குரோத்து நிலையிலிருந்து செயற்படுவதை எதிர்க் கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்தார்.

## நாட்டின் முன்னேற்றத்தை...

தெரிவித்த போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும்போது பொருளாதாரத்திற்கு வழங்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பிலுமே அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சீர்குலைந்து விடாமல் கட்டியெழுப்புவது தொடர்பான ஆலோசனைகளும் ஜனாதிபதியின் உரையில் அடங்கியிருந்தன. ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவித்து வருவது போல நாம் சர்வதேசத்துடன் தொடர்புகளை காத்திரமாக மேற்கொண்டு வருகிறோம். இது, ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை யிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. விமர்சனங்களின் அடிப்படையிலேயே எதிர்க்கட்சி, தம்மை தக்க வைத்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் எத்திட்டமும் எதிர்க்கட்சியிடம் கிடையாது. இவர்கள் முன்வைத்துள்ள திட்டங்கள், எவரும் ஏற்றுக் கொள்ளாத திட்டமாகவே அமைகிறது.

முதலில் நாடு தொடர்பில் சிந்தித்து ஏனையவைகளை இரண்டாம் கட்டமாக பார்க்க வேண்டும் என்பதையே ஜனாதிபதி தமது உரையில் வலியுறுத்திக் கூறினார்.

## 5,000 ஏக்கர் காணி...

நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசனாயக்க தெரிவித்தார். எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டலும், நாட்டிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசனாயக்க இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசனாயக்க, நாடு பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்த வேளையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். இப்போது அந்தப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறார். அத்துடன், என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களும் கடும் வீழ்ச்சியைச் சந்தித்திருந்தன. அந்நிறுவனங்களில், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மாத்திரமே இலாபம் ஈட்டியது. அந்த நேரத்தில் ஆண்டுக்கு சுமார் 280 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டி வந்தது.

## ஒரே குடும்பத்தை சேர்ந்த...

மற்றும் அவரது 03 குழந்தைகளே தஞ்சமடைந்தவர்களாவர். 1.50,000 ரூபா பணம் செலுத்தி மன்னாரிலிருந்து படகில் இவர்கள் இராமேஸ்வரத்தை அடுத்துள்ள தனுஷ்கோடி அரிச்சல்முனை ஒன்றாம் மணல் திட்டில் கரையிறங்கினர். தகவலறிந்த இராமேஸ்வரம் கரையோர பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் கரையோர பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தினர். விசாரணையின் பின்னர் இந்த ஐவரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## ரூபா, 03 கோடி...

சந்தைப் பெறுமதியுள்ள அம்பருடன் பயணிக்கையிலேயே இவர்கள் கைதாகினர். இவர்கள், 25 மற்றும் 30 வயதுக்கிடைப்பட்டவர்களாவர். அழிந்து வரும் விலங்கினமான திமிங்கலங்களின் உடலிலிருந்து வெளியாகும் வாந்தியால் உருவாகிறது அம்பர். வாசனை திரவியங்களின் நறுமணத்தை நீண்ட காலத்துக்கு பராமரிக்க இது பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## புற்றுநோய்க்கான...

கைச்சாத்திடப்பட்டது. சுகாதார அமைச்சின் சார்பில் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் பாலித்த மஹிபால மற்றும் அனுசரணை வழங்கும் LDS Latter – day saints charities (USA) நிறுவனத்தின் சார்பில் Mickey Lui Area Welfare and SelfReliance Director ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இம்மருந்துகளின் பெறுமதி ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாகும். ஒரு வருடத்துக்குத் தேவையான மருந்துகளையே அமெரிக்கா அன்பளிப்புச் செய்கிறது. மேலும் இரண்டாவது கட்டத்தின் கீழ் தேவையான இன்னுமொரு தொகை மருந்துகளை எதிர்வரும் மாதத்தில் பெற்றுக் கொடுக்க அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## யுக்திய: கைதான குடு...

குடு ரொஷானுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 07 சரீரப் பிணைகளும் அவரது சகோதரருக்கு தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான நான்கு பிணைகளும் விதித்து உத்தரவிடப்பட்டது.

## ஜே.வி.பியின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கடந்தகாலங்களில் பல இந்திய முதலீடுகள் மற்றும் முதலீட்டாளர்களை நாடு இழந்தமைக்கு ஜேவிபியே முக்கிய காரணமென அவர் தெரிவித்துள்ளார். ஜேவிபியின் இந்திய எதிர்ப்புகொள்கையால் சம்பூர் மின்திட்டம் கைவிடப்பட்டமை இதற்கான ஒரு உதாரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சபாநாயகர்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அவருக்கு அமைச்சுப் பதவி இல்லாத காரணததைால் பாராளுமன்ற அமர்வின் போது ஆளும் கட்சியின் பின்வரிசை ஆசனத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் பாராளுமன்றத்துக்கு வருகை தருவதை தவிர்த்திருந்தார்.


### இரத்தினபுரி சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் தங்காபரண கண்காட்சி
### கிராண்ட் சில்வர் ரே - இரத்தினபுரி

### காட்சி அறைகளை பெற்றுக் கொள்வதற்கான அழைப்பு !

சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபை, அகில இலங்கை மாணிக்கக்கல் வர்த்தகர்கள் மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் சங்கம் உட்பட இரத்தினபுரியில் அமைந்துள்ள மாணிக்கக்கல் சங்கங்களின் ஒருங்கிணைப்புடன் முதல் முறையாக நடத்தப்படுகின்ற இரத்தினபுரி சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் தங்காபரண கண்காட்சி 2024 மார்ச் 30, 31 மற்றும் ஏப்ரல் 01 ஆம் திகதிகளில் இரத்தினபுரி லெல்லோபிட்டிய கிராண்ட் சில்வர் ரே ஹோட்டல் வளவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலுள்ள கண்காட்சியின் மாணிக்கக்கல்/ தங்காபரணம்/ உபகரணங்கள் மற்றும் கருவிகள்/ பெறுமதி மேம்படுத்தப்பட்ட மாணிக்கக்கல் மற்றும் தங்காபரணம்/ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகம் ஆகிய பிரிவுகளின் கீழ் தமது உருப்படிகளை முன்வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு இதில் தமது உருப்படிகளை காட்சிப்படுத்துவதற்கு மற்றும் வர்த்தக வாய்ப்பை விரிவுபடுத்துவதற்கு விரும்புகின்ற உரிமம் பெற்ற மாணிக்கக்கல் மற்றும் தங்காபரண வர்த்தகர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காட்சியறைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருப்பதால் விண்ணப்பதாரர்களை தேர்வு செய்வது முறையான அளவுகோல்கள் உள்ளடங்கிய விற்பனை கூடங்களின் வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் மூலம் தேர்வு இடம்பெறுவதோடு இதற்காக ஆர்வம் காட்டுகின்ற வர்த்தகர்கள் தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு (www.ngja.gov.lk) பிரவேசித்து குறித்த விண்ணப்பப்படிவ மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். (*நிபந்தனைக்கு உட்பட்டது)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "RATHNAPURA INTERNATIONAL GEM & JEWELLERY SHOW 2024" என்று குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தை 2024 பெப்ரவரி 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இரத்தினபுரி பிராந்திய அலுவலக ஏற்றுமதி சேவை பிரிவு/ கொழும்பு தலைமை அலுவலக ஏற்றுமதி ஊக்குவிப்பு பிரிவுக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விற்பனைக் கூடம் தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு உதவிப் பணிப்பாளர் (ஏற்றுமதி சேவை மற்றும் ஏற்றுமதி விற்பனை) அனோமா வெரலுபே அவர்களை (0713841253)/ ஊக்குவிப்பு உதவியாளர் மனீஷா நிகேஷலா அவர்களை (0711400181) அழைக்கவும்.

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபை**
**இல. 12, 'மெக்சன்ஸ் டவர்', அல்பிரட் ஹவுஸ் பூங்கா, கொழும்பு 03.**
**தொலைபேசி: 011-2329295, 2325364 மற்றும் 2390645-8**
**தொலைநகல்: 011-2320758, 011-2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**



### சுகாதார அமைச்சு
### தேசிய இரத்தமாற்று பிரயோக சேவை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கொழும்பு – 05 தேசிய இரத்த நிலையத்தில் PABX முறையை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல்

1. கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/5டி, தேசிய இரத்தமாற்று சேவையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் கீழே விபரிக்கப்பட்டவாறு, கொழும்பு-05, தேசிய இரத்த நிலையத்தில் PABX முறையை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுதாரர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/5டி, தேசிய இரத்தமாற்று சேவையின் கணக்காளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
5. 2024.02.22 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, 555/5டி, தேசிய இரத்தமாற்று சேவை கணக்காளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுவானது 49 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தக்காலமானது ஆரம்பிக்கும் உண்மையான திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் 2024.03.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 10,000 ரூபா பெறுமதியானதும் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதாகவும் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியொன்றினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனியொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**பணிப்பாளர்,**
**தேசிய இரத்தமாற்று சேவை,**
**இல. 55/5டி, எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி: 0112369931**
**தொலைநகல்: 0112369939**



### இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### பிரிவெனா சாதாரண தரப் பரீட்சை – 2023 (2024)

2024 ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள "பிரிவெனா சாதாரண தரப் பரீட்சை - 2023 (2024)" இற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி பரீட்சைக்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடிவது கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள அடிப்படை பிரிவெனா, மகா பிரிவெனா, பௌத்த சீலமாதா கல்வி நிறுவனம் மற்றும் விசேட பிரிவெனாக்களில் மாத்திரம் ஆவதால் கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள மேற்படி பிரிவெனாக்களுக்கு விண்ணப்பங்கள் தற்போது தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

02. 2024 பெப்ரவரி 12ம் திகதி ஆகியும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத கல்வியமைச்சில் பதிவு செய்துள்ள அடிப்படை பிரிவெனாக்கள், மகா பிரிவெனாக்கள், பௌத்த சீலமாதா கல்வி நிறுவனம் மற்றும் விசேட பிரிவெனா ஆகியவையாகும். தமது நிறுவனத்தினால் முன்வைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒருங்கமைப்பு கிளையில் இருந்து விண்ணப்பத்தை கோரல் வேண்டும்.

03. இப் பரீட்சைக்கு தோற்றுகின்ற தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு தேவையான விண்ணப்பங்களை வார நாட்களில் அலுவலக நேரங்களில் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளைக்கு வருகைதந்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் தபாலில் பெற்றுக் கொள்வதற்கு தமது பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட ரூ.130.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 10X7 அளவிலான கடித உறையுடன் 2024 பெப்ரவரி 12ம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரியில் விண்ணப்பித்தல் வேண்டும். அக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரிவெனா சாதாரண தரப்பரீட்சை - 2023 (2024)" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை திணைக்கள இணைய தளத்தில் (www.doenets.lk) பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

04. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் 2024 பெப்ரவரி 20 ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அத்தினத்திற்கு முன்பு பதிவுத் தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ. - 1503 கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரிவெனா சாதாரண தரப்பரீட்சை - 2023 (2024)" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**5/5/4/3/2023**
**நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்ல**
**2024 பெப்ரவரி 08ம் திகதி**

# வடமாகாண கல்வியில் நிலவும் சிக்கல்கள் தீர்த்து வைக்கப்படும்

## கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த

கரவெட்டி தினகரன் நிருபர்



வடமாகாணத்தில் கல்வித்துறையில் நிலவும் சிக்கல்களை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம், அம் மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற போதே, கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மத்திய கல்வி அமைச்சு அதிகாரிகள், மாகாண அமைச்சு அதிகாரிகள், கல்வித்துறைசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் கல்வியில் நிலவும் சிக்கல்கள் மற்றும் கல்வித்துறைசார் தேவைகள் தொடர்பாக தெளிவுபடுத்திய ஆளுநர், பின்தங்கிய இடங்களிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க மத்திய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரினார்.

இதேவேளை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சியில் பௌதீகவளங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை உள்ளதாகத் தெரிவித்த ஆளுநர், ஆயினும் சில பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதாகவும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக மாகாண கல்வி அமைச்சு தரவுகளை திரட்டியுள்ளதுடன், பாடவிதானங்களின் அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களை அந்தந்த பாடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆளுநர் தெரிவித்தார்.

ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு இதனூடாக தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ஆளுநர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

பூநகரி, ஜெயபுரம் பிரதேசத்தில்

## மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

### காணிகளை பகிர்ந்தளிக்கவும் அமைச்சர் டக்ளஸ் உறுதி



கிளிநொச்சியின் பூநகரி, ஜெயபுரம் பிரதேசத்தில் காணி அற்ற மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளித்து மரமுந்திரிகை செய்கையில் அவர்களை ஊக்குவிக்க கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த திங்களன்று (05) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே, தீர்மானம் எடுக்கப்பட்டது.

பூநகரி, ஜெயபுரம் பிரதேசத்தில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சுமார் 472 ஏக்கர் காணியானது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால், அப்பிரதேசத்தில் காணி அற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் காணிகளை பெற்றுக்கொள்வோர் மரமுந்திரிகை செய்கையில் ஈடுபடுவதற்கான ஒத்துழைப்பை வழங்கவுள்ள மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், அறுவடை விளைச்சலை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்வதற்கும் தீர்மானித்துள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்த முயற்சியால் பூநகரி, ஜெயபுரத்தைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்கள் நேரடியாக பொருளாதார நன்மை அடைய முடியுமென்பதுடன், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் மரமுந்திரிகை பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு தேவையான மூலப்பொருட்களை நியாயமான விலையில் தாராளமாக பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். புத்தூரில்

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மீது துப்பாக்கி சூடு

### 3 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது



யாழ். விசேட நிருபர்

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமொன்றை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை காட்டிய போதும், நிறுத்தாமல் செல்ல முற்பட்ட அவ்வாகனத்தின் மீது யாழ்ப்பாணம், புத்தூர் பிரதேசத்தில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதுடன், சந்தேகநபர்கள் மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை (07) இடம்பெற்றதுடன், டிப்பர் வாகன சாரதி, அதன் உரிமையாளர் உட்பட மூவரையே கைது செய்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, விசாரணை நடத்தி வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் புத்தூரில் டிப்பர் வாகனத்தை தாம் வழிமறித்ததாகவும் ஆயினும் டிப்பர் வாகனத்தை சாரதி நிறுத்தாமல் செல்ல முற்பட்டார். இந்நிலையிலேயே டிப்பர் வாகனத்தின் மீது தாம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் இதனைத் தொடர்ந்து அவ்வாகனம் வீதியில் குடைசாய்ந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றமையாலேயே, வாகனத்தை சாரதி நிறுத்தாமல் செல்ல முற்பட்டதாக தமது ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## நல்லூரில் யோகா பயிற்சிநெறி

யாழ். விசேட நிருபர்

வடக்கு மாகாண கல்வி அமைச்சினுடைய இளைஞர் விவகார அலகால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (10) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் யோகக்கலை புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பிரதி சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் காலை 8.00 மணிவரை யோகக்கலை வகுப்பு நடைபெறும். சுமார் 3 மாதங்களை கொண்ட இப்பயிற்சியில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி பங்குபற்ற முடியுமெனவும் பயிற்சியை பூர்த்தி செய்வோருக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படுமெனவும், கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
செவ்வாய் 2024.02.06
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5382 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 37,579,136.00 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 8 6 3 9 6 0 |

| கொவிசெத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3624 |
| சீட்டிழுப்பு திகதி | 2024.02.06 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 64,979,773.52 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 20 37 69 80 |
| விசேட எழுத்து | Y |
| இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் | 93562 |

| Mega POWER | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1730 |
| திகதி | 2024.02.06 |
| Double Chance | 68019 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 423,057,354.00 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கங்கள் | 19 29 35 66 |

| Lucky 7 VIP | |
|---|---|
| திகதி | 2024.02.06 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0208 |
| ஆங்கில எழுத்து | U |
| L7 எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 9 2 0 6 6 3 |
| அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு | ரூ. 24,711,316.60 |

| ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 2024.02.06 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 691 |
| அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு | ரூ. 3,946,734.08 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 20 35 50 54 |
| தனயோக இலக்கம் | 20184 |
| நாளுக்கான விதி எண் | 06 |

| தன நிதானய | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1412 |
| திகதி | 2024.02.06 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 134,513,944.00 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 28 40 51 55 |
| விசேட எழுத்து | W |
| இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் | 03724 |


## காணி விவகாரம்; கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

பரந்தன் குறூப் நிருபர்



கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் காணிப் பிரச்சினை தொடர்பான முக்கிய கலந்துரையாடல் அம்மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (07) நடைபெற்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் துறைசார்ந்த உயர்மட்ட அதிகாரிகளுடன் நடைபெற்றது.

வனவள திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட விவசாயிகளின் விளைநிலங்களை விடுவித்தல் மற்றும் தொழில் முயற்சிகளுக்கான காணிகள் தொடர்பாகவும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவித்தல் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்கத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், காணிக்கிளை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## யாழில் தென்னிந்திய பாடகர் ஹரிகரன்



யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சிக்காக தென்னிந்திய பிரபல பாடகர் ஹரிகரன் நேற்று புதன்கிழமை (07) யாழ்ப்பாணத்தை சென்றடைந்தார். யாழ்ப்பாணத்தின் முற்றவெளி மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை (09) மாலை ஹரிகரனின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிலையிலேயே பாடகர் ஹரிகரன் யாழ்ப்பாணத்தை சென்றடைந்தார். *(யாழ். விசேட நிருபர்)*

கட்டைக்காட்டில்

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர் கைது

கரவெட்டி தினகரன் நிருபர்



யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு கடற்பரப்பில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட கடற்றொழிலாளர் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) பிற்பகல் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வெற்றிலைக்கேணி கடற்படையினர், கட்டைக்காட்டைச் சேர்ந்த 23 வயதுடைய இச்சந்தேகநபரை உடைமைகளுடன் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றிய உடைமைகளுடன் சந்தேகநபரை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்கள அலுவலகத்தில் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.


ST&S SINCE 1892 ®

# பெறுமதி மிக்க ஏலவிற்பனை

21 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
2023 பெப்ரவரி 11 ஞாயிற்றுக்கிழமை
இல. 41/15 நாகமுல்ல வீதி, பெலவத்த
என்ற முகவரியில்
எமது வாகன விற்பனை நிலையத்தில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரங்கள்:

கார்கள்:

| | | |
|---|---|---|
| WP GX 1XXX | பேர்ஜோ 406 | 1999 |
| 300 2XXX | டேவூ எஸ்பெரோ GLX | 1997 |

கெப்கள்:

| | | |
|---|---|---|
| WP PJ 2XXX | மிட்ஷுபிஷி L200 டபிள் கெப் (டீசல்) | 2016 |
| WP PY 5XXX | டாட்டா 207 DI சிங்கிள் கெப் (டீசல்) | 2014 |
| WP PV 6XXX | டாட்டா சுப்பர் ஏஸ் சிங்கிள் கெப் (டீசல்) | 2013 |
| WP LA 0XXX | டாட்டா 207 DI சிங்கிள் கெப் (டீசல்) | 2005 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| 253 1677 | இசுசு பார்கோ (டீசல்) | 1995 |
| 250 7709 | நிசான் VRGE24 (டீசல்) | 1993 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| WP BIM 0215 | சுசூகி கிக்ஸர் SF | 2018 |
| WP BHK 4408 | டெமாக் DZR 120 | 2018 |
| WP BIL 0784 | டெமாக் EX90 | 2017 |
| WP BIL 0783 | டெமாக் EX90 | 2017 |
| WP BIL 0780 | டெமாக் EX90 | 2017 |
| WP BIT 5325 | டெமாக் EX90 | 2017 |
| WP BHO 7047 | டெமாக் DZR 120 | 2017 |
| WP BHG 6729 | டெமாக் ஸ்கைபோன் | 2017 |
| WP BIG 5967 | டெமாக் ரொபிகா | 2017 |
| WP BHZ 8785 | டெமாக் சாவேஜ் சுப்ரா | 2017 |
| WP BIK 5187 | டெமாக் ரொபிகா | 2016 |
| WP BCZ 7115 | டெமாக் ரொபிகா | 2016 |

டிரக்குகள்:

| | | |
|---|---|---|
| WP PY 0XXX | மஹிந்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக் (டீசல்) | 2014 |

பார்வையிடல் - 2024 பெப்ரவரி 09 வெள்ளி முதல்
மு.ப 9.00 முதல் பி.ப 5.00 மணி வரை
மேலதிக விபரங்களுக்கு - www.sandslanka.com

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம ®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
011 2671468
Like us on Facebook
www.sandslanka.com


## சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மீது தாக்குதல்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் குழுவொன்றால் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்ததை தொடர்ந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் மேற்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மந்துவில் மேற்கிலுள்ள சனசமூக நிலையம் முன்பாக இளைஞர் குழுவொன்று நின்றுகொண்டு, பிரதேச சபையால் பொருத்தப்பட்ட தெரு மின்விளக்கை சேதப்படுத்த முற்பட்டதை கடைக்குச் சென்ற இவர் அவதானித்து, அதைக் தட்டிக் கேட்டார். இதன்போதே இவர் மீது அக்குழுவினர் தாக்குதல் நடத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சுயதொழில் பயிற்சிநெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாண மாவட்ட குடிசார் அமைப்புகளினுடைய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கு நடத்தப்பட்ட சுயதொழில் முகாமைத்துவ பயிற்சிநெறியை பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கு கடந்த திங்களன்று (05) சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளன தலைவி ம.தமிழ்ச்செல்வி தலைமையில் தொண்டைமானாறு இந்து அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளன உறுப்பினர்கள், பயிற்சிநெறியை பூர்த்தி செய்த பெண்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது, யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளினுடைய சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கலந்துரையாடலும் நடைபெற்றது.

# கடன் பொருளாதாரத்தில் இருந்து விடுபட்டு நமக்கான வலுவான பொருளாதாரத்தை உருவாக்க பாடுபடுவோம்!

(02ஆம் பக்கத் தொடர்)

இந்த நாட்டில் ஊழல் ஒரு சாபக்கேடாக மாறிவிட்டது என்பதை பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், முறைமையான சட்ட விதிகளால் மாத்திரமே ஊழலை ஒழிக்க முடியும் என்பதை பலர் உணரவில்லை. திருடர்கயைப் பிடியுங்கள் என்று கூச்சல் போடுவதால் மாத்திரம் திருடர்களைப் பிடிக்க முடியாது. திருடர்களைப் பிடிப்பதற்கு, வலுவான சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் அறிவியல் முறைகள் தேவை. அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய பயிற்சி பெற்ற அதிகாரிகளும் தேவை.

ஊழல்வாதிகளை நீதியின் முன் நிறுத்தினால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். இது ஒரு மாயை. ஊழலைத் தடுக்கவும் கடுமையான சட்ட விதிமுறைகளை உருவாக்க வேண்டும். மேலும் ஊழல்வாதிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். ஊழலை ஒழிக்க இந்த இரண்டு விடயங்களும் ஒன்றாக செயல்படுத்தப்பட வேண்டும்.

அதற்காக, ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றினோம். தற்போது சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நாங்கள் ஒருபோதும் அரசியல் அல்லது பிற அழுத்தங்களைப் பிரயோகிக்க மாட்டோம். அது தற்போது நாட்டின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் சமூக நவீனமயமாக்கலில் நாம் கவனம் செலுத்தும் சில முக்கிய விடயங்கள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

சுற்றுலாத்துறையை எம்மால் எளிதாக அபிவிருத்தி செய்ய முடியும். அந்தத் துறையில் முன்னேற்றத்திற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்தவும், நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வருடத்திற்கு 05 மில்லியனாக அதிகரிப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

நமது நாடு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் நிறைந்த நாடு. அந்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சர்வதேச தொழில்நுட்பத்தைப் பெற்று, நம் நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்தால், வலுசக்தி ஏற்றுமதி செய்யும் நாடாக அந்நியச் செலாவணியைப் பெறலாம்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா உற்பத்தியில் நாம் உயர்ந்த நிலையை அடைய வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஆரம்ப கட்டத் திட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றம் குறித்து நாம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறோம். இது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இருந்து தற்போது வரை விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். பயிரிடுகின்றோம். ஆனால் இன்னும் காலாவதியான முறைகளையே பின்பற்றி வருகிறோம். பல தசாப்தங்களாக எந்த விவசாய நவீனமயமாக்கல் பணிகளையும் நாங்கள் முன்னெடுக்கவில்லை.

அடுத்த மூன்று, நான்கு போகங்களில் உலர் வலயத்தில் விவசாய நிலங்களின் உற்பத்தியை இரண்டு, மூன்று மடங்கினால் உயர்த்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். அதற்கான கொள்கை ரீதியிலான முடிவுகளை நாங்கள் எடுத்துள்ளோம். இம்மாதம் முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டு இப்பணிகள் ஆரம்பிக்கப்படும். இவ்வாறு, உலர் வலயத்தில் விவசாயப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், ஈரவலயப் பகுதியில் உள்ள நிலத்தை ஏனைய வர்த்தகப் பயிர்களுக்குப் பயன்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

எழுபதுகளில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட பயனுள்ள பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் தற்போது வீணாகிவிட்டன. சில நிலங்களில் உரிய பயனைப் பெறுவதில்லை. சில நிலங்கள் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை. ஜனவசம, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் போன்ற பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் வீணாகி வருகின்றன. அது மாத்திரம் அல்ல. இந்த அரச நிறுவனங்களைப் பராமரிக்க பில்லியன் கணக்கான அரச பணம் செலவிடப்படுகிறது. இரு பக்கத்திலும் நாட்டிற்கு இழப்பு. பாரிய வீண்விரயம் இடம் பெறுகிறது.

இந்த நிலங்களிலிருந்து அதிகபட்ச உற்பத்தியைப் பெறுவதற்கு பயனுள்ள வேலைத் திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இந்த நிலங்கள் உள்நாட்டுத் தொழில்முனைவோருக்கு ஏற்றுமதி வணிக பயிர்ச்செய்கைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும்.

அவசியம் ஏற்பட்டால், அந்த தொழில்முனைவோர் வெளிநாட்டு தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டைப் பெற அனுமதியும் வழங்குவோம். முறையாகப் பயன்படுத்தப்படாமல் வீணாகப் போகும் நிலங்களை அந்நியச் செலாவணி ஊற்றுக்களாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கு வலுவாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

கடந்த சுதந்திர தினத்திற்கு பிரதம அதிதியாக இங்கு வருகை தந்த தாய்லாந்து பிரதமர், தனது நாட்டில் முன்னெடுத்த விவசாய புரட்சி குறித்த விடயங்களைக் குறிப்பிட்டார். தாய்லாந்து பாரம்பரிய முறைகளில் சிறைப்பட்டிருக்காமல் நவீன தொழில்நுட்பத்தை சரியாகப் பயன்படுத்துவதால் விவசாயத்தின் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது. அவற்றிலிருந்து நாமும் பாடம் கற்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். நமது பொருளாதாரத்தை விரைவாக வலுப்படுத்த வெளிநாட்டு முதலீடுகள் ஊடாக பாரிய உந்து சக்தி கிடைக்கிறது. ஆனாலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வரத் தயங்குகின்றனர்.



இலங்கையில் முதலீடு செய்வது ஒரு தலைவலி, பிரச்சினை. அனுமதி பெறுவதில் பல உத்தியோபூர்வ தடைகள் உள்ளன. அது மட்டும் அல்ல. சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. அவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து, தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களை பாரிய அளவில் கவரும் வகையில் வேலைத் திட்டங்களை நாம் தற்போது தயாரித்துள்ளோம். ஒரு எளிய செயல்முறை மூலம் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதை இது சாத்தியமாக்குகிறது. இது ஊழலை மோசடிகளைத் தடுக்கிறது.

சீனா, வியாட்நாம் போன்ற நாடுகளில் முதலீடு செய்வதற்கான அனைத்து அனுமதிகளும் வசதிகளும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் ஒரே கூரையின் கீழ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நிலம் மட்டுமின்றி, மின்சாரம், நீர் வசதிகள், வீதிக் கட்டமைப்பும் மிக விரைவாக செய்து தரப்படுகிறது. பெரும்பாலான பணிகள் கணனி மூலம் செய்யப்படுவதால், சட்ட விரோத செயல்களுக்கு வாய்ப்பில்லை. இந்த அனைத்து விடயங்கள் மற்றும் சர்வதேச தரங்களின் அடிப்படையில், தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் பொருளாதார ஆணைக்குழுவை அமைப்பதற்கான அடிப்படை பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பரந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படும் பலவிதமான முதலீட்டு சட்டங்கள் மற்றும் திட்டங்கள் இந்த ஆணைக்குழு மூலம் செயல்படுத்தப்படும்.

அதேபோல் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். இரண்டாம் உலகப் போர் காலத்திலேயே இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் அடிப்படை சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் நாம் காலனித்துவ நாடாக இருந்தோம். அப்போது நாம் மிகவும் வறுமையான நாடாக இருந்தோம். எனவே, அத்தகைய சமூகத்திற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி மற்றும் சுகாதார நடைமுறைகளின் அடிப்படையில் நவீன உலகத்தை அணுகுவது சாத்தியமற்றது. இவற்றின் மூலம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை சமாளிக்கவும் முடியாது.

அதனால் சர்வதேச அனுபவம், நடைமுறைகளின் அடிப்படையில், இரண்டு துறைகளுக்குமான புதிய அணுகுமுறைகள் மற்றும் புதிய சட்டத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். புதிய சூழலுக்கு ஏற்ற வகையில் மனித வளம் மேம்படுத்த வேண்டும். வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் பாதுகாப்பிற்காக துரித நவீனமயமாகக்கல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். விசேடமாக கல்வி மறுசீரமைப்புக்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகின் எதிர்காலம் புதிய தொழில்நுட்ப அறிவின் மீதே தங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் திறன் மிக்க இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும். அதற்காகவே உயர்தரத்தில் சித்திபெறும் மாணவருக்குசெயற்கைக் நுண்ணறிவுக் கல்வியை வழங்குவதற்கான கொள்கையைத் தயாரித்து வருகிறோம். அதற்கான பல அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களை நிறுவும் பணியை மேற்கொண்டு வருகிறோம். சாதாரண தரம், உயர்தரத்தில் சித்தி பெறாத அனைத்து மாணவர்களுக்கும் தொழிற்கல்லூரிகளை உருவாக்குவோம்.

புதிய அறிவு மற்றும் புதிய தொழில்நுட்பத் தெரிவுடன் கூடிய புதிய சந்ததியை உருவாக்குவதற்கு அவசியமான பின்னணியை நாம் ஏற்படுத்துவோம்.

அதேபோல் எமது நாடு ஒரு தீவாகும். அதற்கு உகந்த வகையிலான பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து பாதுகாப்பு வலையமைப்புக்களும் அதற்கேற்ப நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சி முறைகள், படையினர், இராணுவ உபகரணங்கள், மூலோபாய நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும், நாட்டில் ஏற்படக்கூடிய பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்தி வருகிறோம்.

நமது வெளிநாட்டு உறவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். அதே போல் பூகோள அரசியல் நகர்வுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப பொருளாதார வாய்ப்புக்களைப் பெறும் வகையில், உரிய பலன்களைப் பெறும் வகையில் மறுசீரமைக்க வேண்டும். எனவே, அனைத்து நாடுகளுடனும் அணிசேராக் கொள்கையுடனும் நட்புறவு அடிப்படையிலும் வெளிநாட்டு உறவுகளைத் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

## 'அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டு நலன் கருதியே எடுத்தேன்'

அதற்கேற்ப நமது வெளியுறவுக் கொள்கைகள் காலோசிதமானதாக மாற்ற வேண்டும்.

அதேபோல், பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள புதிய முறையிலான வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இதற்கமைய எமது வெளியுறவுக் கொள்கைகளை காலத்திற்கேற்ற வகையில் மறுசீரமைத்துக் கொள்வோம்.

நமது தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளைச் சென்றடைவதற்கு அவசியமான அனுமதியை பெற்றுத் தரக்கூடிய வகையில் பொருளாதார உறவுகளை கட்டமைப்போம். அதற்காக பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட ஆரம்பித்துள்ளோம். இதற்கமைய அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொண்டோம்.



## 'மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமது மனங்களைத் திருத்திக் கொள்வோம். எமக்கு நாமே ஒளியாவோம்!

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், முழுமையான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமாக விரிவுபடுத்தப்படும். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சீனா, இந்தோனேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் வலயத்தின் பரந்துபட்ட பொருளாதார கூட்டமைப்பான RCEP இல் இணையவுள்ளோம். அதேபோல் ஐரோப்பிய சங்கத்தின் வர்த்தகத்துக்கான பொது முறைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவோம்.

இவ்வாறு பல்வேறு துறைகளை நவீனப்படுத்துவதன் பலனாக நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். நாட்டின் அனைத்துப் தரப்பினருக்கும் பலன்கள் கிடைக்கும் வகையில் வெற்றிகரமான திட்டத்தைச் செயல்படுத்தும் அதேநேரம் நல்லிணக்கமும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படும்.

நாங்கள் மற்றொரு விடயம் குறித்து கவனம் செலுத்துகிறோம். இன்று எமது பொருளாதாரம் கொழும்பு நகரையும் மேல் மாகாணத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. நாட்டின் 46 வீதமான பொருளாதாரம் மேல் மாகாணத்திலிருந்தே முன்னெடுக்கப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். மேல் மாகாணத்திற்கு வெளியே பொருளாதாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, ஹம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசியலமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம். தொழிற்கல்வி, விவசாயம் போன்ற துறைகளை உதாரணமாகக் கூறலாம். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும். மாகாணங்களுக்கு இடையில் பொருளாதாரப் போட்டித் தன்மையை உருவாக்குவதன் மூலம், ஒன்பது மாகாணங்களும் ஒரே நேரத்தில் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு உருவாகும்.

எமது நாட்டின் புவியியல் அமைவிடத்தை மையப்படுத்தி உயரிய பலனை அடைந்து கொள்ள எதிர்பார்க்கிறோம். அதற்காக மூன்று துறைமுகங்களில் புதுவிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். அதனால் இந்து சமுத்திரத்தின் சேவை மத்தியஸ்தானமாகவும் பொருளாதார மத்திய நிலையமாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கிறோம்.

அதற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரத்தை விசேட நிதி வலயமாக பிரகடனப்படுத்துவோம். அதற்குள் வெளிநாட்டு நிதி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான சட்டத்திட்டங்களை உருவாக்குவோம்.

எமது நாட்டின் தேசிய வளம் எமது இளம் சமூகத்தினர் என்பதை அடிக்கடி நினைவுகூறுகிறேன். அந்த வளத்தைப் பாதுகப்பது எமது ஒருமித்த நோக்கமாகும். இளம் சமூகத்தின் பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பிற்கு நிகரானதாகும். கடந்த காலங்களில் இளம் சமூனத்தினர் நாட்டை விட்டுச் சென்றனர். அந்த நிலை தற்போதும் உள்ளது. அதனால் எமது இளம் சமூகத்தினருக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். அதனை செய்ய வேண்டிய பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்துள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனைவிடுத்து சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

இவ்விடத்திலிருந்து முன்னேறிச் செல்வதற்கு புதிய வலுவான பொருளாதாரத்திற்கு நாம் மாற வேண்டும். அதற்கான பொருளாதார மாற்றச் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும். அதற்குரிய புதிய நிறுவனத்தையும் உருவாக்க வேண்டும்.

அரசியல் அபிலாஷைகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண்கதை பேசி எம்மால் முன்நோக்கிச் செல்ல முடியாது. மாறாக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த மாற்றத்தைக் குறுகிய காலத்தில் செய்துவிட முடியாது. அதற்காக நீண்ட கால முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியப்படும். அதே பாதையில் தொடர்ந்து சென்றால் 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறலாம். எந்த நெருக்கடிக்கும் குறுகிய கால தீர்வுகள் இல்லை. இரண்டு நாட்களில் எந்த இலக்கையும் அடைய முடியாது.

புத்த பெருமான் ஞானம் பெறுவதற்காக மிக நீண்டகாலம் ஆனது. ஞானம் பெற்ற பின்னரும் அவர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதனைப் புரிந்து கொண்டு நாம் நிதானமாகவும் திட்டமிடலுடனும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் புத்தரின் பிரசங்கம் ஒன்றைக் கூறினேன். புத்தரின் பிரசங்கத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, கிறிஸ்துவுக்கு முந்திய ஐநூறாம் ஆண்டுகளில் சீனாவில் வாழ்ந்த தத்துவஞானி கன்பூசியஸ் என்பவர் "உலகைக் கட்டியெழுப்ப முதலில் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தேசத்தை கட்டியெழுப்புவதற்கு முன் குடும்பத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். குடும்பத்தைக் கட்டியெழுப்பும் முன்னதாக எமது தனிப்பட்ட வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு முன்னதாக எமது மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்" என்று கூறியுள்ளார்.

எனவே, இந்த சபையில் உள்ள அனைவரும் முதலில் மனதைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க, அவர்களுக்கான சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் சரியான பாதையில் செல்ல வேண்டும். அதற்காக நம் மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை ஒற்றுமையுடன் எதிர்கொண்டால் மட்டுமே நமது பயணத்தைத் துரிதப்படுத்த முடியும். தமக்குக் கிடைக்கும் அந்தஸ்துகள் பற்றி கனவு காணும் சிலர், அந்த நாட்டை விடவும் பதவிகளை அதிகமாக நேசிக்கின்றனர். அந்த பதவிகளுக்காக நாட்டுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர். நாட்டையும் மக்களையும் ஏமாற்றுகின்றனர். நடைமுறையை உணராமல் கனவுப் பாதையில் செல்ல முற்படும் பட்சத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக ஒற்றுமையாக கலந்துரையாடுவோம். நாங்கள் செயல்படுத்தும் முறையை விட சிறந்த மாற்று முறைகள் இருந்தால், அவற்றைக் கூறுங்கள். அவற்றை ஆழமாகப் ஆராய்வோம். அது குறித்தும் கலந்துரையாடுவோம். அவற்றில் நாட்டுக்குச் சிறந்தென கருதப்படும் யோசனையைச் செயற்படுத்துவோம். அவ்வாறான பேச்சுக்களில் கலந்துகொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம். அவ்வாறான பேச்சுக்களுக்குக்கு தயார் எனில், அந்தக் கலந்துரையாடல்களுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதானிகளையும் அழைப்பிக்க முடியும்.

கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் தொடர்பில் இரு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன்.

19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் எழுத்தாளரும் பேச்சாளருமான எலன் கெல்லர் "தனியாக நாம் சில விடயங்களை மட்டுமே செய்ய முடியும். ஒன்று பட்டால் பல விடயங்களை செய்யலாம்."

19 ஆம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் தனது நாடு பற்றி எழுதிய கவிதையொன்று நினைவிற்கு வருகிறது. அதனை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன

''முப்பது கோடி முகமுடையாள்
உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்
இவள் செப்பு மொழிபதி னெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்'

அவ்வாறான எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை? பல்வேறு எண்ணங்கள் இருந்தாலும் பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும், பல்வேறு பிரச்சினைகள், நம்பிக்கைகள் இருந்தாலும், பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்தாலும், எமது நாட்டிற்காகவும் அதன் எதிர்காலத்திற்காகவும் ஒருமித்த எண்ணத்துடன் ஒன்றுபட முடியாமல் இருப்பது ஏன்? எமது நாட்டு இளைய சமூகத்தின் எதிர்காலத்திற்காக ஒன்றுபட முடியாதிருப்பது ஏன்?

மீண்டும் மீண்டும் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். பொது நோக்கத்துடன் ஒன்றுபடுங்கள். மாற்றத்தை நம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமக்கு நாமே ஒளியாவோம்.

இந்தச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளில் பல தசாப்தங்களாக என்னை விமர்சித்தவர்களே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளனர். நாட்டின் நன்மைக்காகவும், இளையோரின் எதிர்காலத்திற்காகவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாளானவர்கள் பழைய பகையை மறந்துவிட்டு ஒன்றுபட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் என்னுடன் பல காலமாக அரசியலில் ஈடுபட்டவர்கள். நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் உள்ளனர். நாட்டுக்கான பொது பயணத்தில் இணைந்துகொள்ள பொதுஜன பெரமுனவால் முடியுமாயின் ஐக்கிய மக்கள் சக்தியால் அதனை செய்ய முடியாதிருப்பது ஏன்?

மக்கள் விடுதலை முன்னணி நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எம்முடன் நெருக்கமாக செயற்பட்டது. ஊழல் ஒழிப்பு பிரிவின் அலுவலகத்திற்கு ஆனந்த விஜயபாலவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாறிருக்க நாட்டின் பொது முன்னேற்றத்திற்கான பயணத்தில் இணைய முடியாதிருப்பது ஏன்?

இந்தச் சபையில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்னுடன் இணைந்து பணியாற்றியுள்ளன. எனினும், நாட்டிற்காக இந்தக் கட்சிகளுக்கு பொதுப் பயணத்தில் ஏன் இணைந்து கொள்ள முடியாது.

நாம் தேர்தலில் வெவ்வேறாக போட்டியிடுவோம். ஆனால் நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் இணைந்துகொள்வோம்.

அதனால் நாட்டை முன்னேற்ற பொது நிலைப்பாட்டுடன் பொதுவான எண்ணத்துடன் ஒன்றுபட முன்வாருங்கள் என மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமது மனங்களைத் திருத்திக்கொள்வோம். எமக்கு நாமே ஒளியாவோம். நாம் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம். தனிப்பட்ட நோக்கங்களுக்காக அன்றி நாட்டின் பொதுக் கனவை நனவாக்க ஒன்றுபடுவோம். அடுத்த சந்ததியின் முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுவோம். எம்மீது சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நாம் நிறைவேற்றுவோம். பல்வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக, இந்த பொறுப்புக்களைப் புறக்கணித்தால் வரலாற்றில் நாம் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவோம். அதனால் புதிய பயணத்தைத் தொடர்வோம். புதிய எதிர்காலத்தை, புதிய நாட்டை உருவாக்குவோம்.

வாருங்கள் ஒன்றுபட்டு நாம் புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்!

## 'இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம், தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம் தற்போது ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது'

# கிழக்கின் குரல்

## சாய்ந்தமருதில் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு

### மாணவர்களை தேடி விசேட நடவடிக்கை

*( மாளிகைக்காடு குறூப் நிருபர்)*



சாய்ந்தமருது பிரதேசத்தில் பாடசாலை இடைவிலகல் தொடர்பில் கண்காணிக்கும் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 5 வயது முதல் 16 வயது வரை சகல பிள்ளைகளுக்கும் கல்வியை கட்டாயப்படுத்த வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகின்றது. எனினும், பாடசாலை செல்லாது மாணவர்களை வீடுகளில் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுவதுடன் அது மாணவர்கள் வாழ்வையும் சூனியமாக்கும் செயற்பாடாகும்.

மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாது கடைகளிலும் வேறு தொழில் நிறுவனங்களிலும் தொழில்புரிவதோடு, சிலர் யாசகம்,மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களிலும் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனை தடுத்து நிறுத்துவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகம், சாய்ந்தமருது பிரதேச செயலகம் , பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொதுமக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஸிக் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய

## வைத்தியசாலைகளுக்கு புதிதாக வைத்தியர்கள் நியமனம்

*(பாலமுனை விசேட நிருபர்)*



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு புதிதாக 14 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்றது.


இந்நிகழ்வை கல்முனை பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம். சீ.எம்.மாஹிரின் ஒருங்கிணைப்பின் கீழ் நிர்வாகப் பிரிவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரிவுத்தலைவர்கள் தத்தமது பிரிவுகள் தொடர்பான அறிமுகத்தை, பிரிவுகளினால் முன்னெடுக்கப்படும் சேவைகள் பற்றியும் விரிவாக விளக்கினர்.

அதனைத்தொடர்ந்து புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர்களுக்கு புதிய சேவை நிலையங்களுக்கான கடிதங்களும் பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டன.

## பாடசாலை மாணவி திடீர் மரணம்

*(மண்டூர் தினகரன் நிருபர்)*



வ வு ண தீ வு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கிக்கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியொருவர் பாடசாலை சென்று வீடு திரும்பிய நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார். பாலக்காடு மங்கிக்கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த தரம்01 இல் கல்வி கற்கும் உதயகுமார்ஸிவிதா என்ற 6 வயது மாணவியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வழமைப்போல் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பிய மாணவி தாயின் மடியில் படித்து நித்திரை செய்து கொண்டிருக்கும் போது திடீரென மயக்கமடைந்துள்ளார். இதனையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16ஆவது பட்டமளிப்பு விழா

*( திராய்க்கேணி நிருபர் )*



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழா தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஒவ்வொரு நாளிலும் தலா மூன்று அமர்வுகளாக மொத்தமாக 2152 பேருக்கு இதன்போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதல் அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பேரும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடத்தைச் சேர்ந்த 355 பேரும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பேரும் பட்டம் பெறவுள்ளதாக உபவேந்தர் தெரிவித்தார்.

இரண்டாம் நாளில் இடம்பெறவுள்ள நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தை சேர்ந்த 314 பேரும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 350 பேரும் ஆறாவது அமர்வில் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 361 பேரும் பட்டங்கள் பெறவுள்ளனர். இதனடிப்படையில் மொத்தமாக 1441 உள்வாரி மாணவர்களும், 711 வெளிவாரி மாணவர்களுமாக மொத்தம் 2152 பேருக்கு இவ்விழாவில் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

மூதூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட

## பொது இடங்களுக்கு சட்டரீதியான காணி உரித்து பிரதேசசபை செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்

*(தோப்பூர் தினகரன் நிருபர்)*

மூதூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொதுஇடங்களுக்கு சட்டரீதியான காணி உரிமைகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று மூதூர் பிரதேசசபை செயலாளர் வீ.சத்தியசோதி தலைமையில் மூதூர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

ஆலயங்கள், மதத்தலங்கள் ,மயானங்கள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், பொதுக்கிணறுகள் ஆகியவற்றுக்கான சட்டரீதியான காணி உரிமைகளை எவ்வாறு பெற்றுக்கொடுப்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் கலந்துகொண்டு இதுதொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் 39 பொது மயானங்களும் 18 பொது விளையாட்டு மைதானங்களும் காணப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் முறையான காணி ஆவணங்களை வழங்குவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடலில் சமயத்தலைவர்கள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், மூதூர் பிரதேச சபை அலுவலர்கள், பிரதேசசெயலக துறைசார் உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஊடகத்துறை செயலமர்வு

*(கிண்ணியா மத்திய நிருபர்)*

கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான ஊடகத்துறை செயலமர்வு இன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

ஊடகத்துறை அமைச்சினால், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் (UNDP) கீழ், இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தங்குமிட வசதியுடன் கூடிய இரண்டு நாள் வேலைத்திட்டமாக செயற்படுத்தப்படும் இப்பயிற்சிப்பட்டறையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 35 ஊடகவியலாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## சமுர்த்தி பயனாளிகளுக்கு புதிய வீடுகள் கையளிப்பு

*(இறக்காமம் தினகரன் நிருபர்)*



இறக்காமம் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு றன்விம வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 1 மில்லியன் ரூபா பெறுமதியான வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இறக்காமம் ஆறாம் பிரில் நடைபெற்றது.

இறக்காமம் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எல் நௌபீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம் ரஸ்ஸான் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் ஏ.சி.எம் நசீல், சமுர்த்தி திட்ட முகாமையாளர் ஏ.எல். ஜுனைதா உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.



மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தேவபுரம் விளையாட்டு மைதானம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு முன்னாள் பிரதியமைச்சரும் தமிழர் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் கருணா அம்மானினால் நேற்று காலை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் பிரதியமைச்சரின் இணைப்பாளரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் அமைப்பாளருமான நந்தகுமார் பிரதீப் தலைமையில் மைதானம் திறப்பு விழா இடம்பெற்றது. பிரதேச முக்கியஸ்தர்கள், அரச அதிகாரிகள், விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
(படம்:மட்டக்களப்பு குறூப் நிருபர்)

## திருக்கோவில் தாமரைக்கேணி குளக்கட்டை புனரமைக்குமாறு மகஜர் கையளிப்பு



*(காரைதீவு குறூப் நிருபர்)*

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாரிய உடைப்பெடுத்த குளக்கட்டை அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம நேரடியாக சென்று பார்வையிட்டார். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள பாலக்கரச்சி தாமரைகேணி குளக்கட்டில் பாரிய உடைப்பு ஏற்பட்டிருந்தது. பாலக்கரைச்சி தாமரைகேணி விவசாய அமைப்பு, திருக்கோவில் பிரதேச செயலாளர். தங்கையா கஜேந்திரனிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவர் நேற்றுமுன்தினம் இப்பகுதிக்கு விஜயம் செய்தார். இதன்போது விவசாயிகளினால் குளத்தை புனரமைக்குமாறு கோரி மகஜரொன்றும் மாவட்ட செயலாளரினால் கையளிக்கப்பட்டது.

## இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்சந்தை

*(தம்பலகாமம் குறூப் நிருபர்)*

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சந்தை நேற்று (07) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 76 இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதல்" என்ற தொனிப்பொருளில் இவ்வேலைத்திட்டமானது நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் பி.ஆர். சுமித்கொட்டின்கடுவ, தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் எஸ். ஸ்ரனி, இளைஞர் சேவை உத்தியோகத்தர் எ.என்.பிரபாத் தில்ருபன் பண்டார, ஏனைய பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் 250 இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.



நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கோளாவில் அம்மன் மகளிர் இல்லத்திலுள்ள சிறுவர்களுக்கு பகல் போசனம் வழங்கப்பட்டது. அக்கரைப்பற்றில் அமைந்துள்ள இலங்கை இராணுவ 241 படைப்பிரிவினர், இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கட்டளை அதிகாரி பிரிகேடியர் எல்.எஸ்.ரீ.என்.பத்திரத்ன சிறுவர்களுக்கு சமைத்த உணவு பரிமாறுவதை படத்தில் காணலாம் . ( படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## உள்ளூர் துப்பாக்கி, ஹக்கபட்டஸ் வெடிபொருட்களுடன் ஒருவர் கைது

*(ரொட்டவெவ குறூப் நிருபர்)*



புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணிபுர பகுதியிலிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ஹக்கபட்டஸ் வெடி பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. விசேட பொலிஸ் அதிரடி படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ஹக்கபட்டஸ் வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. சந்தேகநபர் 31 வயதுடைய புல்மோட்டை டி10 மணிபுர பகுதியைச் சேர்ந்த புஞ்சிபண்டாகே இந்திக சுகத் பண்டார என தெரியவருகிறது.

புல்மோட்டை விசேட பொலிஸ் அதிரடி படையினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து சந்தேகநபரை சோதனையிட்டபோது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் எட்டு ஹக்கபட்டஸ் என்று அழைக்கப்படும் வெடிகளுடன் சந்தேகநபரை கைது செய்ததாகவும் இதனையடுத்து புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் தெரியவருகிறது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

## டெங்கு அபாயம்

*(ஒலுவில் விசேட நிருபர்)*

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள நகர் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார். அத்துடன் இப்பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பருவ மழை பெய்ததையடுத்து அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதோடு இது தொடர்பாக பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நகர்வலம்



# நாட்டில் எந்தவொரு அரசியல்வாதியும் செய்யாத பாரிய மாற்றத்தை ஜனாதிபதி ரணில் செய்துள்ளார்

## அநுராதபுரம் நிகழ்வில் துமிந்த திசாநாயக்க எம்.பி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருப்பது நாட்டுக்கு அதிர்ஷ்டம் எனவும் அவர் எந்த ஒரு அரசியல்வாதியும் செய்யாத பாரிய மாற்றத்தை செய்துள்ளார் . இந்த மாற்றம் 20 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்தால் இன்றைய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்க மாட்டோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் 'இலங்கையை வெற்றிகொள்வோம்' நாடுதழுவிய மக்கள் நடமாடும் வேலைத் திட்டத்தின் 2ஆம் நாள் நிகழ்வு அநுராதபுரம் சல்காது மைதானத்தில் (02) நடைபெற்றது. இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் அவ்வாறு தெரிவித்தார்.



இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்: நாம் வாழ்வாதார போராட்டத்தில் இருக்கின்றோம். நான் உட்பட மாவட்ட செயலாளர், அமைச்சர்கள் , செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் என சகலரும் வாழ்வாதாரப் போராட்டத்தில் இருக்கின்றோம். எரிவாயு விலை அதிகம் எரிபொருள் விலை அதிகம் நீர், மின்சார கட்டணங்கள் அனைத்தும் அதிகம். என கூறுகின்றோம். ஆனால் அதற்கு பதில் என்ன ? உங்களுக்கு தெரியும் சீனி கிலோ ஒன்றின் விலை ஐந்து ரூபாவினால் அதிகரித்தால் பேசுவது சீனியைப் பற்றி மாத்திரம்தான். மின்சார கட்டணம் அதிகரித்தால் அதைப்பற்றி பேசுகின்றனர்.

மின்சார கட்டணத்தை 30 வீதத்தினால் குறைத்தாலும் எடுக்கும் சம்பளத்தை கொண்டு வாழ முடியாதுள்ளது. விசேடமாக அரச உத்தியோகத்தர்கள் எடுக்கும் ஊதியம் என்ன. அரச ஊழியர்களுக்கு இது கஷ்டம்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக 2015 ஆம் ஆண்டு வரைக்கும் நாம் செயல்பட்டோம். 2015க்கு பின்னர் நாம் ஒன்று சேர்ந்தோம். ஆனால் 2015 வரைக்கும் அவருக்கு எதுவும் செய்ய முடியாது என்று கூறினோம். அவருக்கு எல்லோரும் சொல்கின்றார்கள் வெறும் ஜனாதிபதி பதவி என்று. அது அதிர்ஷ்டமாக இருக்கலாம். ஆனால் அவர் எந்த அரசியல்வாதியும் செய்யாத மாற்றத்தை செய்துள்ளார்.

இதுபோன்று 20 வருடங்களுக்கு முன்னர் செய்திருந்தால் இன்றைய நிலை எமக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால் இது யாருக்கும் விளங்கவில்லை. இந்த மொழிபெயர்ப்பு இந்த நேரம் சரி செய்யாவிட்டால் எமது எதிர்கால சந்ததியினர் சுதந்திரமாக இருக்க முடியாது. சில நேரங்களில் எடுக்கும் முடிவுகள் அதிகாரிகள் மற்றும் மக்களும் திருப்திப்படாத தீர்மானங்களாக இருக்கலாம். ஆனால் இதை எங்கிருந்தாவது ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார் .

# காடழிப்பை பார்வையிட சென்ற 'சுரகிமு ஸ்ரீலங்கா ' அமைப்பினர் மீது தாக்குதல்;

## கைது செய்யப்பட்டோர் நேற்று பிணையில் விடுதலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கோமாரிக்கா (கற்றாளை ) பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்காகவேண்டி வில்பத்துவ தேசிய வனப்பூங்காவின் ராஜாங்கனை மேற்பகுதியில் இடம்பெறும் காடழிப்பு தொடர்பில் பார்வையிடுவதற்குச் சென்ற 'சுரகிமு ஸ்ரீலங்கா' இயக்கத்தின் தலைவர் பாஹியன்கல ஆனந்த சாகர மற்றும் தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவர் லியங்வல சாசனரத்ன ஹிமி உள்ளிட்ட குழுவினர்களை தாக்கி அவர்கள் பயணித்த வாகனங்களை சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பெண் சந்தேக நபர் உள்ளிட்ட ஏழுபேரை அநுராதபுரம் ராஜாங்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ராஜாங்கனை பொலிஸ் நிலையத்தில் பாஹியன்கல தேரர் உள்ளிட்ட தேரர்கள் குழுவினர்களினால் செய்த முறைப்பாட்டினை அடுத்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் (06) மாலை வில்பத்துவ தேசிய வனப்பூங்காவின் ராஜாங்கனை யாய 18 மேற்பகுதியில் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் 43,38,45,58,50,32,47 வயதுடைய ராஜாங்கனை யாய 18, கலாஓய பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது. நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய சந்தேக நபர்களை நேற்று நீதவான் பிணையில் விடுதலை செய்தார்.



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பாணந்துறை கல்கொட மஹா விகாரையில் பௌத்த, இஸ்லாம், கத்தோலிக்க மற்றும் இந்து மத பிரார்த்தனைகளுடனான சர்வ சமய நிகழ்வுகள் இடம்பெற்றபோது எடுத்த படம்.
(படம் பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# பல்கலை தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கௌரவிப்பு

**( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

பலளுவெவ கிராமத்திலிருந்து முதன் முதலாக பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் மற்றும் கலை பீடத்திற்கு பலளுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாணவிகளையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ரொலெக்ஸ் விளையாட்டு மைதானத்தில், ரொலெக்ஸ் விளையாட்டுக்கழக தலைவர் ரில்மி பளீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை ரொலெக்ஸ் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்ததுடன், இதற்கான உதவிகளை பலளுவெவ குட் பிரண்ட்ஸ் நண்பர்கள் குழு வழங்கியது. இந்நிகழ்வில் ரொலெக்ஸ் விளையாட்டுக்கழக நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும்



பலளுவெவ பள்ளி பரிபாலன சபைத் தலைவர் என்.ஏ.எம்.ரமீஸ், திக்கந்தியாவ பள்ளிவாசல் தலைவர் எம்.சாதீக் ஆசிரியர், கெகிராவ கிரிக்கெட் கவுன்சில் அமைப்பின் செயலாளர் ஏ.எம்.டீ.பாயிஸ், குட் பிரண்ட்ஸ் நண்பர்கள் குழுவினரும் கலந்து கொண்டனர்.

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இலவச மருத்துவமுகாம்

சமூக மேம்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு சங்க பொதுச்செயலாளர் கேட்டுள்ளார்.

# குடும்பஸ்தர் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மதுரங்குளி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (04) நஞ்சருந்தி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி , வேல்சுமனபுர பகுதியைச் சேர்ந்த உதய சனத் பத்திராஜா எனும் 48 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மதுபானம் அருந்தும் பழக்கமுடைய உயிரிழந்த நபர் இதற்கு முன்னரும் ஒருசில தடவைகள் இவ்வாறு நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சி செய்ததாகவும், சில சந்தர்ப்பங்களில் தான் நஞ்சருந்தியிருப்பதாக மனைவியிடம் கூறியுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டைவிட்டு வெளியே சென்ற குறித்த நபர் மீண்டும் வீட்டுக்கு வந்து தான் நஞ்சருந்திவிட்டதாக மனைவியிடம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

கணவன் கூறியதை கணக்கில் எடுக்காத மனைவி, தமது வீட்டுக்கு முன்னால் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு மீண்டும் வீட்டுக்கு வருகை தந்த போது வீட்டு வாசலில் கணவன் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு குவைத் நாட்டின் நிதியுதவியில் அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பினால் வறிய குடும்பங்கள் வாழுகின்ற பண்டாரகொஸ்வத்தை ஹிபம்பொல கிராமத்திற்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டு அதன் மூலமாக சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ. நூருல்லாஹ் (நளீமி) வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# ஹம்பாந்தோட்டை இக்ராவின் வருடாந்த இல்ல விளையாட்டு

## பரிசளிப்பு விழா இன்று

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின்அதிபர்எம். இஸட்.எம். இர்பான் தலைமையில் நேற்று (07) ஆரம்பமானதோடு இன்றும் (08) ஹம்பாந்தோட்டை மாநகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது.

இதில் ஹம்பாந்தோட்டை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஓ.பி.ஜி. நிலானி பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக தென்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழிப் பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம். மஷாயிர், ஹம்பாந்தோட்டை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு) எச். கே. தினுஷிகா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் பீ. ஜயசூரிய, சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எம்.எம். ரிஸான், சட்டத்தரணி எஸ்.எம் ரிஷாம், இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் முன்னாள் பிரதி அதிபர் எம்.ரீ.எம். இஸ்ஸத் ஆகியோருடன் பாடசாலை அபிவிருத்தி நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடன் மேலும் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# மாகொல சமூக சேவையாளர் கௌரவிப்பு



மாகொல முஸ்லிம் சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் ஆரம்ப கால மாணவரும் அந்த நிலைய பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவருமான எம். சீ. எம் சியாமை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மாகொல முஸ்லிம் சிறுவர் மேம்பாட்டு நிலையத்தின் பழைய மாணவர் சங்கத்தில் பல்வேறு பதவிகளை வகித்து, செயற்குழு உறுப்பினராக செயற்பட்டு ஆதரவற்ற சிறுவர்களின் நலனுக்காக உழைத்தமைக்காக இந்த கௌரவிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பழைய மாணவர் சங்க செயற்குழு தலைவர் எஸ். எம் அஸ்வர், செயலாளர் முனவ்வர், முன்னாள் தலைவர் இல்யாஸ் பாபு, நிர்வாக சபை உறுப்பினர் எம்.ஸீ.எம் முஸப்பர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஆரம்ப காலத்தில் இருந்தே அரசியல், சமூக சேவை போன்றவற்றில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்ட எம். சீ. எம் சியாம், பல வருடங்களாக மகரஹம புற்றுநோய் வைத்தியசாலை (அபேக்ஷா) செயற்குழு உறுப்பினராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாணின் நிறை, விலையை காட்சிப்படுத்த வேண்டுகோள்

**திறப்பனை தினகரன் நிருபர்**

பாணின் நிறை மற்றும் அதன் விலையை காட்சிப்படுத்துவது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவிடயமாக நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலையும் மீறி விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள், சுற்றி வளைப்புகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராம் ஆகவும் அரை இறாத்தல் பாணின் நிறை 225 கிராமாகவும் இருக்க வேண்டியது கட்டாயம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பாணின் நிறை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் பல்வேறு வகையான பாண் வகைகள் விற்பனை செய்யப்படுவதால் அவற்றுள் எவ்வகையான பாணின் நிறை பற்றி அறிந்து கொள்வதில் கடினம் இருப்பதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை ஜாமிஅத்துல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் சுதந்திர தின நிகழ்வு (4) கலாபீட வளவில் நடைபெற்றது. நிகழ்வின் இறுதியில் கலாபீட வளவில் மரம் நடும் நிகழ்வும் இடம்பெற்றது. இதில் மாணவர்கள் உட்பட மத்ரஸா நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.







பேருவளை ஜாமிஆ நளீமிய்யாவின் ஐம்பதாண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற நாற்பெரும் விழாவில் கலந்துகொள்வதற்கான அழைப்பிதழ்கள் பேருவளை உதவி பிரதேச செயலாளர் ரன்ஜன் பெரேரா, பிரதேச சபை செயலாளர் அசோக்க ரனசிங்க மற்றும் பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார ஆகியோருக்கு ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலய உப தலைவர் மிர்சூக் பளீல் வழங்கி வைப்பதை படங்களில் காணலாம்.

# அகில இலங்கை முஸ்லிம் விவாகப் பதிவாளர் சங்க பொதுக்கூட்டம்










## கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 12 விவாகப் பதிவாளர்கள் கௌரவிப்பு

அகில இலங்கை முஸ்லிம் விவாகப் பதிவாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் கண்டி லைன் ஜும்ஆப் பள்ளிவாசலில் சங்கத்தின் உப தலைவர் பஸ்லுர் ரஹ்மான் மௌலவியின் வழிகாட்டலுடன் தலைவர் எம். ஜே. எம். சுஹைல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக அகில இலங்கை பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் சங்கத்தின் தலைவர் துஷ்மந்த கருணாநாயக்க கலந்து கொண்டார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீனின் விசேட மார்க்கச் சொற்பொழிவு இடம்பெற்றது.

சங்கத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் எம். எஸ். எம். ரிஷாத், பொருளாளர் எம். குவாமி பாரூக் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்களுடன் நாடளாவிய ரீதியில் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்திய, வட மத்திய, சப்ரகமுவ சகல மாகாணங்களிலும் விவாகப் பதிவாளர்களாக கடமையாற்றுகின்ற முஸ்லிம்



விவாகப் பதிவாளர்கள் கலந்து கொண்டனர். இதன்போது, ஓய்வுபெற்ற கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த விவாகப் பதிவாளர்கள் 12 பேர் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இந்நிகழ்வில் விசேட பேச்சாளராகக் கலந்து கொண்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் இங்கு உரையாற்றும் போது,**

விவாகப் பதிவாளர்கள் சமூக நல நோக்குடனே கடமை புரியவேண்டும். திருமண வீட்டார்களின் இல்லத்தில் இருந்து கிடைக்கப் பெறும் பணத்தில் இருந்து ஏதோ ஒரு வகையில் கடமை புரிந்து வருகின்றார்கள். விவாகப் பதிவாளர்களுடைய பணி உத்தமமானது. உயர்வானது, நேர்மையானது கண்ணியமானது, இதற்கு நிகராக எதையும் சொல்ல முடியாது. அந்தளவுக்கு மிகவும் பெறுமதியான பணி நீங்கள் சுமந்து சமூகத்திற்கு சேவை அடிப்படையில் நீங்கள் செய்து கொண்டு இருக்கின்றீர்கள்.

விவாகப் பதிவாளர்கள் என்பது தம்பதியினரைச் சேர்த்து வைப்பதாகும். சாட்சி இல்லாமல் திருமணம் நடத்த முடியாது. அந்த அடிப்படையில் மணவாளர்களையும் சாட்சியாளர்களையும் சேர்த்து திருமணம் செய்து நல்ல சந்ததியினர்கள் ஈன்றெடுப்பதற்கு துணையாக இருப்பவர்கள்தான் விவாகப் பதிவாளர்கள். யாரோ நல்ல விடயங்களுக்கு வழிகாட்டுகின்றார்களோ அவர்கள் கூலியைப் பெற்றுக் கொள்வார்கள். நல்ல சந்ததியினர்களை ஈன்றெடுத்து அவர்கள் சந்தோசமாக வாழ்வதற்கு ஆரம்பத்திலே வழிவகை செய்கின்றவர்களுக்கு நிச்சயமாக அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் நற்கூலி இருக்கிறது. திருமண வீட்டில் கிடைக்கின்ற அன்பளிப்புக்கள் அல்ல அல்லாஹ்விடத்தில் அதை விட மிகப் பெறுமதியான கூலி இருக்கிறது. ஒரு திருமண வீட்டுக்குச் சென்றால் 2 அல்லது 3 மணித்தியாலங்கள் காக்க வேண்டி வரும். ஒரு ஏழை மனிதனாகச் சென்று அந்த திருமணத்தை செய்து வைக்கின்றனர். எந்த முகமும் சுளிக்காமல் செய்து வருகின்றார்கள். இவை அனைத்திற்கும் அல்லாஹ்விடத்தில் கூலி இருக்கிறது. இப்படியான ஒரு சிறந்த பணியைச் செய்யக் கூடிய விவாகப் பதிவாளர்கள் ஊரிலே மிகவும் கண்ணியமானவர்கள், மதிக்கப்படக்கூடியவர்கள். இது அல்லாஹ்வுடைய மாபெரும் அருள். இது அல்லாஹ்வுடைய தெரிவு ஆகும். விவாகப் பதிவாளர் மிகவும் கண்ணியமான சிறந்த பதவியைச் செய்து வருகின்றார்கள்.

இது ஒரு மிகவும் பெறுமதியான நம்பிக்கைக்குரிய விடயம். இந்த நம்பிக்கைக்குரிய விடயத்தை நாங்கள் சரியாக நிறைவேற்றுகின்ற போது ஏராளமான நன்மைகளை நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம். ஒருவன் நம்பிக்கையை நிறைவேற்றா விட்டால் அவனிடம் இறை நம்பிக்கை இல்லை. நம்பிக்கை இல்லாவிட்டால் அவனிடம் மார்க்கமில்லை என்று நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நம்பிக்கையினை துஷ்பிரயோகம் செய்வார்களோ இறுதி நாளின் அடையாளம் விரைவாக வந்து விட்டது என்று எதிர்பாருங்கள் என்று நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே இது ஒரு பெரிய நம்பிக்கை சார்ந்த விடயம் என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இது பொறுப்பு வாய்ந்த கடமை என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திருமணம் நடந்தேறும் சபையில் விவாகப் பதிவாளர்தான் உயர்ந்தவர். அதில் ஜனாதிபதியோ, அல்லது செல்வந்தரோ வேறு யாராக இருந்தாலும் அங்கு விவாகப் பதிவாளர்தான் உயர்ந்த மனிதராக மதிக்கப் படுவார். திருமணம் நடந்தேறும் சபையை நடத்துபவர் விவாகப் பதிவாளர்கள்தான். எனவே இப்படி இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரணான பிழையான திருமணத்தைச் செய்து வைத்தால் இறைவனின் சாபத்திற்கு ஆளாகுவோம். மாபெரும் உத்தமான பதவியும்தான். பயங்கரமான பதவியும்தான்.

விவாகப் பதிவாளர்கள் இஸ்லாமிய திருமணச் சட்டங்களுடைய முறைகளைத் தெளிவாகப் படித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் கல்வியைக் கற்றுக் கொள்வது அவசியம். தொழுகையா அதற்கான அறிவைப் படித்துக் கொள்ள வேண்டும். வியாபாரமா அதற்கான அறிவைப் படித்துக் கொள்ள வேண்டும். அதே போன்று விவாகப் பதிவாளராக இருந்தால் திருமணம் பற்றிய சட்டத்தைப் படித்துக் கொள்ள வேண்டும். சில பேர் திருமணம் தொடர்பான சட்ட திட்டங்களைப் படித்துக்




கொள்ள வேண்டும். அநேகமானவர்கள் படித்திருக்கலாம். ஆனால் உலமாக்களிடமிருந்து படித்துக் கொள்ள வேண்டும். அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையிலும் இது தொடர்பான விடயங்கள் இடம்பெறுகின்றன. அவற்றை யாவரும் விளங்கி கட்டாயம் படித்துக்கொள்ள வேண்டும். திருமணம் என்று அழைப்பு விடுக்கப்படுகின்ற போதே இத்திருமணத்தின் சாட்சி யார் என்று கட்டாயம் கேட்க வேண்டும். அவர் தொழுகை ஈடுபாடு உள்ளவராக இருத்தல் வேண்டும். அல்லாஹ்விடத்தில் அச்சம் உள்ளவராக இருத்தல் வேண்டும். தொழாதவராகி விட்டால் சாட்சி சொல்லக் கூட இருக்க முடியாது. அவர்கள் சாட்சி சொல்வதற்குக் கூட தகுதியில்லை. மதுபானம் அருந்தி விட்டு வந்து சாட்சியாளராக கையொப்பமிடுபவர்களும் இருக்கின்றார்கள். எனவே இவைகளை விவாகப் பதிவாளர்கள் கட்டுப்படுத்த முடியும். சாட்சியாளர் என்பது தந்தை வழியில் இருந்துதான் சாட்சியாளர் வருதல் வேண்டும். தந்தை அல்லது தந்தையின் தந்தை ( அப்பா) இருத்தல் வேண்டும். தந்தை உயிரோடு நாட்டிலோ வெளிநாட்டிலோ இருந்தால் வேறு யாரும் சாட்சி சொல்ல இயலாது. வலி இல்லாமல் திருமணம் இல்லை. சாட்சியில்லாமல் திருணம் இல்லை. சாட்சி இல்லை என்றால் காதி நீதிபதியிடம்தான் செல்ல வேண்டும். வளர்ப்பு பிள்ளைகளைத் திருமணம் முடித்துக் கொடுப்பதாக இருந்தாலும் அதுவும் காதியிடம்தான் செல்லும். சில விவாகப் பதிவாளர்கள் முறையற்ற விதத்தில் திருமணத்தை முடித்துக் கொண்டு சீரழிவுக்குக் காரணமாகவும் இருக்கின்றனர். இதில் எல்லாரும் அல்ல. ஒருவர் செய்வதால் எல்லோருக்கும் கெட்ட பெயர் உருவாகிறது.





திருமண சபையில் திருமணப் பதிவாளர்கள்தான் செல்வாக்குமிக்கவர் அந்தச் சபை அல்லாஹ்வின் புனிதம் மிக்க சபையாக கட்டுப்படுத்தி முஸ்லிம் சமூகத்தின் சந்ததியினர்களை உருவாக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். விவாகப் பதிவாளர்கள் என்பது முஸ்லிம் சமூகத்தின் மிக முக்கியமானர்கள். உலமாக்களிடம் விவாகம் தொடர்பான சட்டங்களைத் தேடிப் படித்து திருமண சபையில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு முன் வருதல் வேண்டும். அல்லாஹ்வுக்குப் பயந்து இறையச்சமிக்க நல்ல சந்ததியினரை ஈன்றெடுக்க விவாகப் பதிவாளர்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் உதவியினையும் நல்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்



**இந்நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் சங்கத்தின் தலைவர் துஷ்மந்த கருணாநாயக உரையாற்றும் போது;** இந்த விவாகப் பதிவாளர் சங்கமானது 1960 களில் தோற்றுவிக்கப்பட்ட சங்கமாகும். இதன் முதல் கூட்டம் கொழும்பு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் மண்டபத்தில் இடம்பெற்றது.இந்தச் சங்கம் விவாகம் தொடர்பிலான சட்ட திட்டங்கள் பற்றியும் இஸ்லாமிய சமய சட்ட திட்டங்கள் பற்றியும் தெளிவுபடுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகும். இந்த சட்ட திட்டம் எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பில் வட்சொப் குழுமம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனது வேண்டுகோளின்படி மௌலவி ரியாழ் அவர்களை தலைவராகக் கொண்டு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் சேர்ந்து இவ்வமைப்பை ஆரம்பித்தனர்.

முஸ்லிம் விவாகப் பதிவாளர் சங்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் அனைவருக்கும் நல்லாசிகள் உரித்தாகட்டும். இதன் ஸ்தாபக தலைவர் மௌலவி ரியாழ் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது.

இங்கு வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, போன்ற பகுதிகளில் இருந்து வருகை தந்த அனைவரும் எமது நட்புக்குரியவர். முதல் தடவையாக இந்தச் சங்கத்தின் மூலம் அறிமுகமாகியிருந்தாலும் நாம் எல்லோரும் நட்புக்குரியவர்கள். இங்கு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வருகை தந்துள்ளார்கள். நான் எதிர்பார்த்தது 100 பேர் மட்டும்தான். நான் எதிர்பார்த்த நோக்கம் வெற்றியளித்துள்ளது. எனது கணிப்பீட்டுக்கு அதிகமாக அங்கத்தவர்கள் வருகை தந்துள்ளார்கள், 135 பேர் நாடளாவிய ரீதியில் இருந்து வருகை தந்துள்ளார்கள். இது வரவேற்கத்தக்க விடயமாகும் அம்பாறைப் பகுதிகளில் உள்ள விவாகப் பதிவாளர்கள் தொடர்பில் அதிகளவு வேலைகளைச் செய்யும் படி நான் முன்னர் பணித்திருந்தேன். ரவுவ்சூக் அப்துல் அஸீஸ் ஆகிய இருவரும் பெரும் பங்காற்றினார்கள். நான் அம்பாறைக்குச் சென்று மாவட்ட விவாகப் பதிவாளர் சங்கத்தை தோற்றுவித்தேன். அங்கு பல வேலைகள் செய்துள்ளோம்.

இதன் பணிக்காக 1140 ரூபா அரசாங்கம் வழங்குகின்றார்கள். அதில் ரூபா 240 அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும். மிகுதிப் பணம் 900 ரூபா விவாகப் பதிவாளர்களுக்கு கிடைக்கின்றன. இதன் மூலம் எந்த விதமான நன்மைகளை விவாகப் பதிவாளர்கள் அடைய முடியாது. சேவை நலன் நோக்கத்திலேயே இந்தப் பதிவாளர் சேவை இடம்பெறுகின்றது. அவர்கள் செல்லும் போக்குவரத்துச் செலவுக்குக் கூட போதாது. இதே நிலைமைதான் சிங்கள, தமிழ் விவாகப் பதிவாளர்களுக்கு உண்டு. ஒரு சேவை நலன் நோக்கோடுதான் இந்த விவாகப் பதிவாளர் சேவை நடைபெறுகின்றது.

முஸ்லிம் விவாகத் திருமணத்தில் முஸ்லிம் பெண் ஒருவரின் திருமண எல்லை 12 வயது எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த வயதில் எந்த வொரு திருமணமும் இதுவரையிலும் இடம்பெற்றதில்லை. வெறுமனே அது சட்டத்தில் மட்டும்தான் உள்ளது. ஆனால் எல்லோரும் காலம் பிந்தித்தான் திருமணம் செய்து கொள்கின்றனர்.

நாடளாவிய ரீதியில் இயங்குகின்ற அனைத்து விவாகரப் பதிவாளர் சங்கத்தின் கோரிக்கைளை அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கின்றோம்.

முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் 300 பேர் அளவில் இருக்கின்றார்கள். புதிய நியமனத்தோடு நாடளாவிய ரீதியில் 400 பேர் அளவில் இயங்கு வருகின்றனர். இந்தச் சங்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு அவர்களையும் அரவணைத்துக் கொண்டு செயற்படுதல் வேண்டும். தற்காலிகமாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்தை மீண்டும் இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற விவாகப் பதிவாளர்கள் 12 பேர் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மடவளை ஏ. எஸ். எம். கியாஸ், வெலம்பொட ஏ. எல். எம். சுபைர், பன்விலை ஏ. எம். முஹ்சின், தென்னக்கும்புர மௌலவி ஏ. எல். அபூபக்கர், கம்பளை சுலைமான் லெப்பை, திகன அப்துல் ரசாக், மாவில்மட எம். எச். எம் வஸீர் , உடுதெனிய மௌலவி எஸ். எச். எம். முஹ்ஸீன், கலகெதர எம். எஸ். எம். ரபீது, நாவலப்பிட்டி எம். எச். எம். சலாஹுதீன், கம்பளை எம். எஸ். எம். ஜிப்ரி ஹஸ்ரத், தெல்தோட்டை எம். எம். எம். சாதிக் உள்ளிட்டோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



**இக்பால் அலி**

# போதனா வைத்தியசாலை – கராப்பிட்டிய

## கேள்வி அறிவித்தல்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் உள்ள பின்வரும் நிர்மாணங்களுக்காக தகைமைவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களைக் கோருவதற்கு வைத்தியசாலை கேள்விச் சபையின் தலைவரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணங்களின் பொருட்டான அனைத்துக் கேள்விப் படிவங்களும் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | வேலையின் பெயர் | விண்ணப்பதாரரின் தகைமை | மீளளிக்கப் படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி | மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படைச் செலவு மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 1 | வெளி நோயாளர் பிரிவின் முன்புற Facade நவீனமயப்படுத்தல் | C6 மற்றும் C7 | 3,500.00 | 88,000.00 | 8.8 |
| 2 | முன்புற எல்லைச் சுவரை நவீனமயப்படுத்துதல் | C5, C6 மற்றும் C7 | 3,500.00 | 111,000.00 | 11.1 |

01. இதன்பொருட்டு அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரிப் படிவங்களில் மாத்திரமே விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத பிணை வைப்பைச் செலுத்தி வார நாட்களில் 2024-02-28ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. 2024-02-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் அதற்கு முன் கிடைக்கும் வகையில் கேள்விப் படிவங்களை தலைவர், பெறுகைக் குழு, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். குறித்த நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் படிவங்களை திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
04. கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் குறித்த வேலையின் பெயரை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. எந்தவொரு கேள்விப் படிவத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை வைத்தியசாலை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

விபரங்களை 091-2222250, 091-2232176 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**கராப்பிட்டிய, காலி.**
**2024-02-08.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமைவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/ DR/65/2023 | கொழும்பு-15, மட்டக்குளிய, காக்கைத்தீவு 6ஆம் ஒழுங்கை, 2ஆம் ஒழுங்கை, 1ஆம் ஒழுங்கை ஆகியவற்றின் ஒரு பக்க கழிவுநீர் முறையை நிர்மாணித்தல் | 5900.00 | 220,000.00 ரூபா நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் | சி - 05, சி - 06, மற்றும் சி - 07 CIDA தரப்பதிவைக் கொண்ட மழைநீர் அகற்றல் மற்றும் தரை வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பணிப்பாளர் பொறியியலாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 02. | ME/ME/ DR/100/2023 | பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதிக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால். சங்கிலித்தூரம் +205 இலிருந்து +465 – 1 ஆம் கட்டம் (புகையிரத நிலைய வீதி மற்றும் மரீன் ட்ரைவ் இலிருந்து கிளென் அபார் இடம் வரை கடல் வெளியேற்றத்தில்) | 5900.00 | 2,220,000.00 ரூபா நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் | சி - 03 மற்றும் சி - 04, CIDA தரப்பதிவைக் கொண்ட மழைநீர் அகற்றல் மற்றும் தரை வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பணிப்பாளர் பொறியியலாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 03. | ME/ME/ DR/103/2023 | நந்ததாச கோதாகொட மாவத்தையில் மழைநீர் அகற்றல் முறை (பிரான்சிஸ் இடத்திலிருந்து நொரிஸ் அவென்யு வரையும்) | 5900.00 | 500,000.00 ரூபா நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் | சி - 04, சி -05 மற்றும் சி - 06 CIDA தரப்பதிவைக் கொண்ட மழைநீர் அகற்றல் மற்றும் தரை வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பணிப்பாளர் பொறியியலாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 04. | ME/LG/ BR/05/2024 | நகரசபை கட்டிட 1 ஆம் கட்டம் - ஆழமான வெடிப்பு சட்ட திணைக்கள மேல் மாடி ஆண்கள் கழிவறை மற்றும் மற்றும் பொறுப்பாளர் அறை ஆகியயவற்றின் | 5900.00 | 85,000.00 ரூபா நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் | நீர்காப்பு வகுதி எஸ்பி2 அல்லது மேற்பட்ட CIDA தர ஒப்பந்தக்காரர்கள | பணிப்பாளர் பொறியியலாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |

விலைமனு ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) **இரண்டு முறைகளில்** பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின்** இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
   - **வடிவமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாவத்த கொழும்பு 06.**
   - **கொழும்பு மாநகர சபை அனைத்து மாவட்ட அலுவலகங்கள்**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.
   1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
   2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் **மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2024.02.28 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்துமூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

   அ. 2024.02.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பணக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
   ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2024.09.26 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2024.08.27 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
   இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.02.29 ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.
   ஈ. 2024.02.29 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.
   உ. 2024.02.21 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு கொழும்பு-10, மாளிகாகந்த, வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவில் “பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதிக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால். சங்கிலித்தூரம் +205 இலிருந்து +465 – 1 ஆம் கட்டம் (புகையிரத நிலைய வீதி மற்றும் மரீன் ட்ரைவ் இலிருந்து கிளென் அபார் இடம் வரை கடல் வெளியேற்றத்தில்)” என்ற செயற்றிட்டத்திற்காக விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
   ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### உள்ளூராட்சித் திணைக்களம், வட மாகாணம்

# வவுனியா நகர சபை

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்

1. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுகளை நோக்கி (உலக வங்கி/ ஐரோப்பிய ஒன்றியத்திடம்) இருந்து (கொடை) ஒன்று இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலை(களு)க்கு ஒப்பந்தத்திற்கான ஒப்பந்தத்தின் கீழ் கொடுப்பனவுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலை(களு)க்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து வவுனியா நகர சபை சார்பில் (மாகாண திட்ட பெறுகைக் குழு), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | தொழில் வழங்குநரின் மதிப்பிடப் பட்ட செலவு (ரூபா. மில்.) | CIDA தரம் மற்றும் நிபுணத்துவம் | ஒப்பந்தக் காலம் | விலைமனு பிணை தொகை (ரூபா) | விலை மனு செல்லு படிக் காலம் | விலைமனு பிணை செல்லு படிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/VAV/VAUC/2Q24/PT3/01 | வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தின் புனரமைப்பு | 37.21 | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 154 | 600,000.00 | 2024 ஜூன் 26 | 2024 ஜூலை 24 |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரத்துக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிபுணத்துவத்தில் பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமை விலைமனு ஆவணத்தில் பிரிவு 4 (தகைமை விபரம்) மற்றும் பிரிவு 5 இல் (விலைமனு தரவு மற்றும் ஒப்பந்தத் தரவு) உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 0242222736 என்ற தொலைநகல் இலக்கம், 0242227206 என்ற தொலைபேசி இலக்கத்தில் வவுனியா, வவுனியா நகர சபை, செயலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு சாதாரண வேலை நாட்களில் 09:00 மணி மற்றும் 15:00 மணிக்கு இடையே 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை வவுனியா, வவுனியா நகர சபை, செயலாளரிடத்தில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,500.00 ரூபாவை ரொக்கப்பணமாக செலுத்தி சாதாரண வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிக்கு இடையே 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை வவுனியா, வவுனியா நகர சபை, செயலாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
8. விலைமனுக்களை 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாகாண திட்டப் பெறுகைக் குழு (PPPC), உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP), உள்ளூராட்சித் திணைக்களம் (NP), முதியோர் இல்ல வளாகம், கைதடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு வவுனியா, நகர சபையில் 2024.02.22 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

**தலைவர்,**
**மாகாண திட்டப் பெறுகைக் குழு (PPPC),**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**உள்ளூராட்சித் திணைக்களம் (NP),**
**முதியோர் இல்ல வளாகம்,**
**கைதடி.**
**2024 பெப்ரவரி 08**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/23/ PT/02/064 | Spare Parts for Terberg Terminal Tractors | 23,000.00 | 1,000.00 | 2024.02.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/065 | Shirts Short/Long Sleeves 2400 Nos. | 65,000.00 | 1,000.00 | 2024.02.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/066 | Trouser Black, Blue & White – 1500 Nos. | 50,000.00 | 1,000.00 | 2024.02.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/064 | Leather Shoes (2000-Pairs) | 95,000.00 | 1,000.00 | 2024.03.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 பெப்ரவரி 09 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

GL-2866 NISSAN SUNNY, 2001, CAR அதியுய ர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 009046

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

WP-LA-5940-TATA-LPT-2515-MOTOR LORRY-2005 சிவப்பு மற்றும் கறுப்பு அதியுயர் விலைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டு கஸ்தொ ட்ட வீதி , கண்டி. தொ லை பேசி: 0812081033. 009071

கொ ழு ம் பி லு ள் ள மோட்டார் வாகன உதி ரிப்பாகங்கள் க டைக்கு ஊழிய ரொ ரு வர் தேவை. 0712 753495. 009045

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

YC-8698 BAJAJ, 2010, THREEWHEELER, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 009047

**124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு**

NP-RH-9363-EKUBOTA - EK3-471-TRACTOR-2022-ORANGE - கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொலைபேசி: 0 812 081033. 009074

### வேலைவாய்ப்பு

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொத்து, ரைஸ், ரைஸ் என்ட் கறி இற்கு அனுபவமுள்ள ஒருவர் கம்பஹா உணவகத்திற்கு தேவை. 0773976388. 008908

**325 தொழில்துறை பொது**

40 SRI 1187 ISUZU 1979, LORRY அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 008845

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## சுகாதார அமைச்சு

### சுகாதார தகவல் மற்றும் தர மேம்படுத்தல் செயற்றிட்டம் (நிதியிடப்பட்டது) (உலகளாவிய நிதியம்)

# பதவி வெற்றிடங்கள்

2021 ஜூலை 1 ஆம் திகதியிலிருந்து 2025 ஜூன் 30 ஆம் திகதியன்று வரையுமான காலப்பகுதிக்காக எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகியவற்றை எதிர்த்து போராடுவதற்காக உலகளாவிய நிதியத்திலிருந்து HiQi (சுகாதார தகவல் மற்றும் தர மேம்படுத்தல்) செயற்றிட்டத்திற்காக மானியமொன்றின் பிரதான பெறுனராக சுகாதார அமைச்சு விளங்குகின்றது.

ஒப்பந்த அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள முழுநேர பதவிகளுக்காக தகைமையும் அனுபவமுமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பெறுகை விஷேடத்துநர்**
**நிதி முகாமையாளர்**
**செயற்றிட்ட செயலாளர்**

மேலேயுள்ள பதவிகளுக்கான நியதிக்குறிப்புக்கள் https://www.health.gov.lk/ என்ற சுகாதார அமைச்சின் இணையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் சுயதரவுடன் கல்வி, அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் மற்றும் தொடர்பு தொலைபேசி / மின்னஞ்சல்/ தொலைநகல் ஆகியவற்றை பின்வரும் தபால் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சுகாதார தகவல் மற்றும் தர மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**சுகாதார அமைச்சு,**
**இல.: 555/5,**
**1 ஆம் மாடி, பொதுச் சுகாதார கட்டிடத்தொகுதி,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி இல.: 077-6073 948**

---

## இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

### விண்ணப்பங்களுக்கான அழைப்பு

**உபவேந்தர் பதவி**

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களுக்காக அழைப்பு விடுக்கின்றது.

1978ம் ஆண்டின் 16ம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்ட ஏற்பாடுகளின் கீழ் உபவேந்தர் பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலர் ஆவார். அவர் பல்கலைக்கழகத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மைக் கல்விசார் அதிகாரி என்பதுடன் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். அவர் பல்கலைக்கழக பேரவை மற்றும் மூதவை ஆகிய இரண்டினதும் பதவிவழி உறுப்பினரும் அவற்றின் தவிசாளரும் ஆவார். உபவேந்தர் தனது பதவியிலிருந்து முன்கூட்டியே விலகினால் அல்லது 1978 ம் ஆண்டின் 16ம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்தங்களுக்கமைய பதவியிலிருந்து நீக்கப்பட்டாலொழிய மூன்று வருடகாலம் அல்லது தமது அறுபத்தைந்தாவது வயது இவற்றில் முதலில் நேரிடுவது வரை பதவி வகிக்கலாம்.

உபவேந்தர் என்பவர் கல்விசார் தலைமைத்துவம் வழங்குதல், முறைப்படுத்துதல், நடாத்திச் செல்லுதல் என்பவற்றோடு முகாமைத்துவக் கொள்கைகளை அறிமுகம் செய்வதற்கும் மற்றும் பல்கலைக்கழகப் பொது நிர்வாகமான பேரவைத் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கும் பொறுப்பானவர் என்பதால் அவர் கல்விசார் சிறப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவம் மற்றும் திறன்மிகு பாகுபாடற்ற தலைமைத்துவம் ஆகியவற்றின் நியமங்களை நிலைநிறுத்துபவராக இருத்தல் வேண்டும்.

வெற்றிகரமான விண்ணப்பதாரி வலுவான ஆய்வுத் தேட்டம் அடங்கிய உயர் கல்விசார் சாதனைப் பதிவுகள், சான்றுபகர் தலைமைத்துவப் பண்புகள், பன்முகக் குழுமங்களுடன் பாரபட்சமின்றிச் செயலாற்றும் தொடர்பாடல் திறன், கொள்கை நடைமுறைகள் தொடர்பான தெளிவான புரிதல் மற்றும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் அர்ப்பணிப்பு ஆகியவை உடையவராயிருத்தல் வேண்டும். மேலும் அவர் சமூக அர்ப்பணிப்பு அடங்கலாக பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் குறிக்கோள் பற்றிய ஆழ்ந்த புரிதல் உடையவராகவும் இருத்தல் வேண்டும். (விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரிகள் மேலதிக தகவல்களுக்காக பல்கலைக்கழக இணையதளமான http:/www.seu.ac.lk இனைப் பார்வையிட அழைக்கப்படுகின்றனர்)

உபவேந்தரானவர் அதியுயர் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்திற்கு தகுதியானவர் என்பதோடு சம்பளத்தின் 15% உபசரிப்பு கொடுப்பனவுக்கும் இப்பதவிக்கான ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவராவார். இப்பதவிக்கான நியமனம் தொடர்பான நடைமுறைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 10.04.2023 ம் திகதியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கை இல 03/2023 இனை தயவுசெய்து பார்வையிடவும்.

(இதனை https://ugc.ac.lk/attachments/2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf என்ற இணையதளத்தில் பார்வையிடலாம்)

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாகவும் விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதியன்று 63 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

(i) பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரி பற்றிய முழுமையான சுயவிபரக்கோவை
(ii) பல்கலைக்கழகத்தின் விருத்திக்கான சுய தொலைநோக்கு அறிக்கை அத்துடன் விண்ணப்பதாரி உபவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் சாதிக்கத் திட்டமிட்டுள்ளவை பற்றிய சுருக்கப் பட்டியல்
(iii) தற்போதுள்ள உபவேந்தர் அல்லது முன்னர் உபவேந்தர் பதவி வகித்த ஒருவர் விண்ணப்பதாரியின் மேலே பிரிவு (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக அவர் தனது முன்னைய பதவிக் காலத்தில் நிறைவேற்றிய சிறப்பான செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிக்கை
(iv) விண்ணப்பதாரி குறிப்பிட்ட பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து அவர் பணியாற்றும் அரச சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டத் தாபனங்கள் மற்றும் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தவிர்ந்த உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் தொழில் வழங்குநரிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்பதைக் குறிப்பிடும் ஒரு கடிதம்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையொன்றில் விண்ணப்பதாரி ஒருவர் பேரவையின் விசேட கூட்டத்தின் முன் நேரடியாக சமுகமளிக்க முடியாது போகும் வேளையில் செயலாளருக்கான முன்னறிவித்தல் ஒன்றின் மூலம் அவர் மெய்நிகர் (online) ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்.

தகுதியுள்ள அனைத்து அபேட்சகர்களும் மதிப்பீட்டுக்காக சிறப்புப் பேரவைக் கூட்டத்தின் முன்னிலையில் நேர்முகத்தேர்வொன்றுக்காக அழைக்கப்படுவர். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பேரவைக் கூட்டத்தின் முன்பாக குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாது ஒரு சுருக்க முன்வைப்புச் செய்யுமாறு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் மேலே கேட்கப்பட்ட பொருத்தமான ஆவணங்களோடு பதிவாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் எனும் முகவரிக்கு அந்தரங்க உறையில் இடப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் மூலமாக அல்லது நேரடியாக 11.03.2024 பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கச் செய்தல் வேண்டும்.

மேலும், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் மென் நகல் பிரதியுடன் வேறு ஏதேனும் துணை ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் இணைத்து PDF வடிவில் registrar@seu.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "துணைவேந்தர் பதவி" எனக் குறிக்கப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**எம்.ஐ.நௌபர்**
**பதில் பதிவாளர் / பேரவைச் செயலாளர்**
**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**08.02.2024**

---

**The Housewives' companion Classifieds on Daily News**

---

## இலங்கை தர நிர்ணய சபை

SLAB SRI LANKA ACCREDITATION BOARD

### வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை தர நிர்ணய சபை என்பது 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கைக்கான தேசிய அங்கீகார அதிகார சபையாகும். மேலும் இது ஆய்வுகள் / அளவுத்திருத்த ஆய்வகங்கள், மருத்துவ ஆய்வகங்கள், (ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சான்றிதழ்களை சரிபார்த்தல் மற்றும் துல்லியத்தன்மை) என்பவற்றிற்கு பொறுப்பானதாகும். வர்த்தக அமைச்சின் கீழ் தற்போது செயல்படுவதுடன், SLAB ஆல் இயக்கப்படும் அங்கீகார திட்டங்களுக்காக SLAB IAF MLA மற்றும் ILAC MRA ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இணக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணய சபை (SLAB) இன் பின்வரும் பதவிகளுக்கு இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத) - 02 வெற்றிடம்

**தகைமைகள் :**

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் முதல் இருப்பில் ஆறு பாடங்களில் சித்தியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   i. சிங்களம் / தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்

மற்றும்

2. விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம் அல்லது வணிக பிரவில் க.பொ.த (உ/த) பரீட்சையில் தோற்றி ஒரு இருப்பில் மூன்று பாடங்களில் (பொதுப்பரீட்சை அல்லாமல்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

3. அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனமொன்றில் கணனி பொறிமுறைகள் தொடர்பிலான 06 மாத சான்றிதழ் கற்கையை நிறைவு செய்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் :**

பின்வரும் தகுதிகளைக் கொண்ட முதன்மை நிலை-திறமை, முதன்மை நிலை-அரைதிறன் மற்றும் முதன்மை நிலை-திறமையற்ற பிரிவுகளின் பணியாளர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

**கல்வித்தகைமைகள் :**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**ஏனையவை :**

மேற்கண்ட பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை வழங்கியிருக்க வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் 06 மாதகால கணனிக் கல்வியினை கற்றதற்கான சான்றிழலினை கொண்டிருத்தல்.

நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பிருந்த எந்தவொரு சேவைக் காலமும் அல்லது எந்தவொரு பதவிக்கும் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்வதற்கு முன்னர் நிபந்தனையாக பயிற்சியின் கீழ் முடிக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்டபடி தகுதிக்குத் தேவையான ஐந்து வருட சேவைக்குள் கணக்கிடப்படக்கூடாது. ஏதேனும் சாதாரண / தற்காலிக அடிப்படையில் சேவைக் காலம் இந்த நோக்கத்திற்காக கணக்கிடப்படக்கூடாது.

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு : MA 1-2 - 2016 – ரூபா. 27,910 - 10x300 - 7x350 - 12x600 - 12x710 = 49,080**
**நியமனத்தின்போது அடிப்படைச் சம்பள அளவு : ரூபா. 27,910**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :**

எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது நேர்முகப்பரீட்சை மூலமாக தேர்வுகள் நடைபெறும்

### வாகன ஓட்டுனர் - 01 வெற்றிடம்

**தகைமைகள் :**

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியுடன் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

முதன்மை திறனற்ற (PL1) பிரிவில் உள்ள பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்தல்

**சம்பள குறியீடு மற்றும் மாத சம்பள அளவு : PL3 - 2016 - ரூபா [26,290 –10x270-10 x 300 –10 x 330 - 12 x 350 = 39,490 ]**

**நியமனத்தின்போது அடிப்படைச் சம்பள அளவு : ரூபா. 26,290**

**வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

**உறுதிப்படுத்தல் :**

இந்த வகையின் இரண்டாம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு வெளிவாரி விண்ணப்பதாரர் கடமைகளை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் காலத்தில் செயற்பட்டுக்கொண்டு இருப்பார். தகுதிகாண் காலத்தில் அவரது செயல்திறன் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால், மற்றும் முதலாவது செயல்திறன் தேர்வு முடிந்ததும் அவர் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். SLAB இல் ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருட செயற்பாட்டு காலத்திற்கு உட்படுத்தப்படுவார்கள்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :**

தொழிற்திறன் ஆய்வு பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலமாக தேர்வுகள் நடைபெறும்

**ஏனையவை :**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும். பிற நன்மைகள் ஊழியர் சேமலாப நிதியம் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 3% பங்களிப்பு வழங்கப்படும். மேலும் நீங்கள் மருத்துவ காப்பீட்டுக்கு (அக்ரஹாரா) தகுதியுடையவர்களாவர்.

**அனைத்து விண்ணபத்தாரர்களும் :**

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்

**விண்ணப்பிக்கும் முறை :**

**முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத)**

அனைத்து விண்ணப்பதாரர்களும் எமது அதிகாரப்பூர்வ வலைத்தளமான **www.slab.lk, (https://www.slab.lk/career/),** மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும், நிகழ்நிலை மூலம் விண்ணப்பித்த பின்னர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024.02.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த கல்விச்சான்றிதழ்களின் நகல் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்ப செயல்முறையின் போது நிகழ்நிலையில் விண்ணப்பிக்கப்பட விண்ணப்பம் மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்படும் விண்ணப்பம் இரண்டும் தேவை.

**வாகன ஓட்டுனர்**

விண்ணப்பங்கள் 2024.02.28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த கல்விச்சான்றிதழ்களின் நகல் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். அரச அல்லது அரசுசார் திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

விரிவான விளம்பரம் எமது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது **( https://www.slab.lk )**

**தலைவர்**
**இணக்க மதிப்பீட்டிற்கான இலங்கை தர நிர்ணய சபை,**
**இல - 44, விசேட பொருளாதார சந்தை, கிரிமண்டல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட.**

SEL ACINE

**2015 இல. 065 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் 131ம் பிரிவு மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்**

குருநாகல், கொழும்பு வீதியில் அமைந்துள்ள **"MW செனலின் சென்டர்" மற்றும் ஆய்வுகூடத்தின் உரிமையாளர். டபிள்யூ சானக்க குணரத்ன** ஆகிய நான் ஆவேன்.

மேற்படி மருந்தகத்தில் செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இன்றி மருந்துகளை விற்பனை செய்தல் என்ற குற்றச்சாட்டு சம்பந்தமாக குருநாகல் மாவட்ட உணவு மற்றும் ஔடத பரிசோதகர் ஆர்.எஸ்.டீ. புஷ்பகுமார ராஜபக்ஷவினால் குருநாகல் நீதவான் நீதிமன்றத்தின் இல. 87880 இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு / சாட்டுகளுக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் கௌரவ நீதிமன்றத்தினால் 2023 ஒக்டோபர் 13ம் திகதி எனக்கு ரூ. முப்பதாயிரம் (ரூ. 30,000/=) தண்டத்தொகை விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கிறேன்.

இக்குற்றம் எம்மால் மீண்டும் இழைக்கப்படமாட்டாது எனத் தெரிவித்து இடம்பெற்ற குற்றம் சம்பந்தமாக இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்

---

# AMENDMENT OF INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## VALIKAMAM EAST PRADESHIYA SABHA

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

**The point No. 4 and 5 in the IFB published on 07.02.2024 shall be amended as follows.**

To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule and have valid Business Registration.

Qualification requirements include : to qualify for contract award are included in Section II (Bidding Data Sheet) and Section III (Evaluation and Qualification Criteria) in the Bidding Document. Additional details are provided in the Bidding Documents.

**Chairman**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Local Development Support Project (LDSP),**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur. 08.02.2024**

---

# விலைமனுக் கோரல்

## சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல

கஹஹேன நூலகத்திற்கு வளிச்சீராக்கி இயந்திரத்தை பொருத்திக் கொள்வதற்கு

மற்றும்

ஹங்வெல்ல பொது வர்த்தக கட்டிடத் தொகுதிக்கு ரோலர் டோர் 03 மற்றும் ஹங்வெல்ல மாட்டிறைச்சிக் கடைக்கு ரோலர் டோர் 01 செய்து பொருத்துவதற்கு தேவைப்பட்டுள்ளது.

அதற்காக இடத்தை பரீட்சித்து விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு குறித்த விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களை சீத்தாவக்க பிரதேச சபை தலைமையகத்தில் வார நாட்களில் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் தேவையான அளவு பற்றிய விபரங்கள் விண்ணபத்துடன் வழங்கப்படும்.

உங்களது விலைமனுக்களை 2024.02.22 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

விலைமனுக்களை திறத்தல் 2024.02.22 மு.ப. 10.00 இற்கு சீத்தாவக்க பிரதேச சபை கமிட்டி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வேளையில் விலைமனுதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். விலைமனுக்கள் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் சீத்தாவக்க பிரதேச சபைக்கு உரித்தாவதுடன், குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**கே.ஏ. சந்தன பத்மசிரி**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்க பிரதேச சபையின் அதிகாரம்**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல**
**2024.02.06**

---

**සියපත ෆිනෑන්ස්**
**சியபத பினான்ஸ்**
**Siyapatha Finance**
*(Finance Company of Sampath Bank Group)*

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2023 அக்டோபர் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2024 பெப்ரவரி 22ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை , யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புள்ளை | 2023 அக்டோபர் 31ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை அலுவலகம் இல. 111, டட்லி சேனாநாயக்க அவென்யூ, கொழும்பு 8 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

சியபத பினான்ஸ் பி.எல்.சி,
தலைமை அதிகாரி
இல. 111, டட்லி சேனாநாயக்க
அவென்யூ, கொழும்பு 08.

பதிவு இலக்கம்: PB 917PQ

---

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)

பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# விலைமனுக்கோரல்

## இரண்டு வருட காலத்திற்கான சிற்றுண்டிச்சாலைச் சேவை (Cafeteria Service)

1. பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் **2024.04.01** ஆம் திகதி முதல் இரண்டு வருடகாலத்திற்கு குறித்த நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையை தரமாக நடாத்திச் செல்வதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரப்படுகின்றது.
   - கடந்த 10 வருட காலத்தினுள் அண்மித்த காலப்பகுதியில் அரச அல்லது அரசுடன் இணைந்த நிறுவகங்களில் அல்லது தனியார் பிரிவில் நிறுவனமொன்றிற்காக குறைந்தது இரண்டு வருட காலம் 500 க்கும் அதிகமான நபர்களுக்கு உயர்தரமான சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்கியிருத்தல் வேண்டும். குறைந்தது ஒரு வருட (01) காலம் சேவை வழங்கியிருத்தல் மற்றும் இரண்டு வருட (02) கால சேவை அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
   - அரசின் நிபந்தனைகளை மீறாத, அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருக்காதவராக இருத்தல் வேண்டும்.
   - இவ்வாறான வியாபார நடவடிக்கையின் போது கடந்த 5 வருடங்களில் இலங்கையில் உள்ள எந்தவொரு நீதிமன்றத்திடமிருந்தும் எந்தவிதமான தண்டனையோ அல்லது எச்சரிக்கையோ விடுக்கப்படாத நிறுவனமாக இருக்க வேண்டும்.
   - கடந்த 02 வருட கால அண்மித்த பகுதியில் இவ்வாறான வியாபார நடவடிக்கையின் மூலம் ஈட்டப்பட்ட சராசரி விற்பனை வருவாய் குறைந்தது 15 மில்லியன் ரூபாயாக இருக்க வேண்டும்.
   - 2023.12.31 இன் படி, தொழிற்படு மூலதனம் குறைந்தபட்சம் 03 மில்லியன் ரூபாயாக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.3,000/-** ஐ நிறுவக காசாளரிடம் செலுத்தி நிறுவகத்தின் நிருவாக பிரிவிடமிருந்து **2024.02.08** ஆம் திகதி முதல் **2024.02.28** ஆம் திகதி வரை வார நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணி வரை பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனுக்கள் தொடர்பான ஆவணங்களை எவ்வித கட்டணங்களும் செலுத்தாது நிருவாக பிரிவு காரியாலயத்தில் பரிசீலனை செய்ய முடியும்.
3. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி **2024.02.29** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரையாகும். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.
4. இதுதொடர்பான முன்மனுக் கூட்டம் **2024.02.15** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கலந்துரையாடல் அறையில் இடம்பெறும்.
5. அனைத்து விலைமனுக்களும் 2024.02.29 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் **தலைவர், திணைக்களத்தின் கொள்முதல் குழு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். அல்லது நேரில் வந்து நிறுவக நிருவாக பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடமுடியும். விலைமனுக்கள் முன்வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சிலீடா சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல்"** என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-5980271/011-5980293

தலைவர் - திணைக்களத்தின் கொள்முதல் குழு,
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,
28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.

தொலைபேசி இல : 011-5980200 தொலைநகல் : 011-2584406 மின்னஞ்சல் : mail@slida.gov.lk

---

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

## 2024 ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்தம் பொது ஆலோசனை கேட்டல்

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2024 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் திருத்தக் கட்டணத்தைப் பற்றிய வாய்மொழிமூல பொது ஆலோசனை கேட்டலை **2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி, காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்** நடத்தப்படும்.

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் அமைய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவற்கான விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இந்த மூல பொது ஆலோசனை கேட்டலின் போது, உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பாதிப்புகள் அல்லது சிக்கல்கள் அல்லது தகவல்கள் குறித்து வாய்மொழியாக சமர்பிக்குமாறு பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம அழைப்புவிடுக்கப்படுகிறது.

**2024 பெப்ரவரி மாதம் 13** ஆம் திகதிக்கு முன்னர் வாய்மொழிமூல ஆலோசனையை வழங்க கீழே உள்ள ஏதேனும் முறைகளைப் பயன்படுத்தி பதிவுசெய்யவும்.

**பதிவுகளுக்கு:** 071 862 2800
**மின்னஞ்சல்:** consultation@pucsl.gov.lk
**தொலைநகல்:** 011 239 2641
**தொலைபேசி :** 011 239 2607/8 (அலுவலக நேரத்தில் மாத்திரம்)

ஆலோசனை பத்திரத்தை www.pucsl.gov.lk/notices இல் பார்வையிடலாம்

தலைவர்
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

08 பெப்ரவரி 2024

---

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக்காரியாலயம் - கண்டி

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

கண்டி பிராந்தியத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 2022.11.30 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை மீட்டெடுக்கப்படாது அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஏல விற்பனை நிகழும் திகதி** | 2024.03.09 மற்றும் 2024.03.10 | 2024.03.09 மற்றும் 2024.03.10 | 2024.03.09 மற்றும் 2024.03.10 | 2024.03.16 மற்றும் 2024.03.17 | 2024.03.16 மற்றும் 2024.03.17 |
| **இத்திகதி வரை மீட்கப்படாத, புதுப்பிக்கப்படாத நகைகள்** | 2024.03.08 | 2024.03.08 | 2024.03.08 | 2024.03.15 | 2024.03.15 |
| **ஏல விற்பனை நிகழும் இடம்** | கண்டி கிளை வளாகம் | பேராதனை கிளை வளாகம் | கம்பளை கிளை வளாகம் | கட்டுகஸ்தோட்டை கிளை வளாகம் | தெல்தெனிய கிளை வளாகம் |
| **அடகு வைக்கப்பட்ட கிளைகள்** | கண்டி<br>கண்டி நகர மையம்<br>செங்கடலகல<br>மெனிக்கின்ன<br>பன்வில | பேராதனை<br>தவுலகல<br>கடுகண்ணாவை<br>பிலிமத்தலாவை<br>தெல்தோட்ட | கம்பளை<br>கெலிஓயா<br>நாவலப்பிட்டி<br>புஸ்ஸலாவ | கடுகஸ்தோட்டை<br>அக்குறணை<br>அங்கும்பற<br>வத்தேகம<br>அலவத்துகொட<br>பூஜாப்பிட்டிய<br>கலகெதர<br>ஹதரலியத்த | தெல்தெனிய<br>ஹசலக |
| **அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்** | நீதிமன்ற வளாகம்<br>வழக்கறிஞர் அலுவலகம்<br>குண்டசாலை<br>மஹய்யாவா<br>பல்லேகல<br>மாரஸ்ஸன<br>தலாத்துஓயா<br>ஹுலுகங்கை<br>திகன | முறுதலாவ<br>பல்கலைக்கழகம்<br>கிரிபத்கும்புர<br>கலஹா<br>பல்லேகம<br>வெலம்பொட<br>பொத்தபிட்டிய | கம்பளை நகரம்<br>குருந்துவத்தை | பொல்கொல்லஹ<br>ஏடெனிய<br>மடவளை<br>அம்பதென்ன<br>பொக்காவல | மெதமாநுவர<br>உடுதும்புர<br>கொலொங்கொட |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம், இல. 17, தலதா வீதி கண்டி, தொலைபேசி இல : 081-2234283 / 081-2228383

PEOPLE'S BANK
Pride of the Nation

---

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

# இலங்கை மதுவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### பாவனையிலிருந்து நீக்கப்பட்ட வாகன விற்பனைக்கான விலைமனுக்கோரல்

இலங்கை மதுவரித் திணைக்களத்தில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் இலக்கத்தினையுடைய காரினை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | வாகன இலக்கம் | தயாரிப்பு வருடம் | வாகனம் பதிவு செய்யப்பட்ட பிரிவு | வாகனத்தின் வகை |
|---|---|---|---|---|
| 01 | KB - 7223 | 2006 | மோட்டார் கார் | Volkswagen |

இல.353, கோட்டே வீதி, இராஜகிரியவில் உள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் **2024.02.09** ஆம் திகதி முதல் **2024.02.29** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் **மு.ப.10.00 மணி முதல் பி.ப.02.00** வரையான காலப்பகுதியில் குறித்த வாகனத்தை பார்வையிடலாம்.

அவ்வாகனத்தை பரிசீலனை செய்வதற்காக மீள்ச்செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.2,000.00** இனைப் **2024.02.09** ஆம் திகதி முதல் **2024.02.29** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் **மு.ப.09.00** மணி முதல் **பி.ப.03.00** வரையான காலப்பகுதியில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் இரண்டாம் மாடியில் சரப் பிரிவில் செலுத்திய பற்றுச்சீட்டினை திணைக்களத்தின் நிதிப்பிரிவில் சமர்ப்பித்து குறித்த வாகனத்தினை பரிசீலனை செய்வதற்கான அனுமதிப் பத்திரம் மற்றும் மனு ஆவணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக மனுதாரரினால் செலுத்தப்படும் மீள்ச் செலுத்தப்படும் **ரூ.30,000.00** வைப்புத் தொகையை திணைக்களத்தின் சரப்பிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நகல் பிரதியிணை மனு ஆவணத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இருந்து பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் விலைகளைத் தயாரித்து, கடித உறையில் இட்டு முத்திரையிடப்பட்ட உறையின் மேல் இடது மூலையில் **"மோட்டார் கார் KB - 7223 க்கான விலைமனுக்கோரல்"** எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல-353, கோட்டே வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக கையளிக்கலாம் அல்லது தலைமைக் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடலாம்.

மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் : **2024.03.01** ஆம் திகதி **மு.ப.10.00** ஆகும்.

தலைவர்,
திணைன்னளத்தின் கொள்முதல் குழு
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல : 353, கோட்டே வீதி,
இராஜகிரிய.

## பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

**பொது வைத்தியசாலை (போதனா), பேராதனை**

பேராதனை, பொது வைத்தியசாலை (போதனா), பெறுகைக் குழுத் தலைவரினால் கட்டிடங்களை மேம்படுத்துவதற்கு இயைபான பின்வரும் வேலை விடயங்களுக்காக 2024 பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. Inclined Conveyor for Transport Surgical Waste
02. 01/02ஆம் இலக்க வார்ட்டுகளுக்கு நிறப்பூச்சு பூசுதல்
03. வைத்தியசாலையில் பாதுகாப்பு கெமரா முறைமை (CCTV) அமைத்தல்

இந்த வேலை விடயங்களின் சகல தகவல்களையும் 2024-02-08ஆம் திகதி முதல் 2024-02-29ஆம் திகதி வரை பேராதனை பொது வைத்தியசாலையின் www.peradeniya-hospital.health.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2024-02-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பேராதனை பொது வைத்தியசாலை கலந்துரையாடல் அறையில் இடம்பெறும்.

**மருத்துவர் எச்.எம்.ஏ. திலக்கரத்ன,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை (போதனா),**
**பேராதனை.**

---

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

*Daily News*

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 27

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகிறது. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்த 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக்கூடியவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

குறிப்பு எண் :- SI/LP/WPP/2024/05

பொருட்கள் :- White Printing Paper - 24"-70gsm ± 2.5%
பொருட்களின் அளவு :- 100 M/T ± 10%

விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் :-
2024/02/29 பி.ப 2.00 மணி

மீளளிக்கப்படாத கட்டணம் :- ரூபா 12,500.00

ஏல பாதுகாப்பு :- ரூபா 635,250.00

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2024.02.29 பி.ப. 2.00 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/02/08 இலிருந்து 2024/02/28 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்துமூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்

**தலைவர்,**
**திணைக்கள பொருட்கொள்வனவு குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08**
**தொலைபேசி / பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையதளம் :- www.documents.gov.lk**
2024/02/06

---

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 24

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகிறது. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்த 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக் கூடியவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

குறிப்பு எண் :- SI/LP/WPP/2024/04

பொருட்கள் :- White Printing Paper - 27" x 34" -70gsm ± 2.5%
பொருட்களின் அளவு :- 4500 Reams

விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் :-
2024/02/29 பி.ப 2.00 மணி

மீளளிக்கப்படாத கட்டணம் :- ரூபா 12,500.00

ஏல பாதுகாப்பு :- ரூபா 653,400.00

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2024.02.29 பி.ப. 2.00 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/02/08 இலிருந்து 2024/02/28 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்

**தலைவர்,**
**திணைக்கள பொருட்கொள்வனவு குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118,டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08**
**தொலைபேசி / பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையதளம் :- www.documents.gov.lk**
2024/02/06

---

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 30

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் /அவர்களின் பிரதிநிதிகள் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு எண் :- SI 2024/07

பொருட்கள் :- White Printing Paper - 25"x35"- 70gsm±2.5%
எண்ணிக்கை :- 100 MT±10%

விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் :-
2024/02/29 பி.ப. 2.00 மணி

மீளளிக்கப்படாத கட்டணம் :- ரூபா 9,000.00

ஏல பாதுகாப்பு :- ரூபா 690,000.00

2024/02/29 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறு அவ்வேளையிலேயே மனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 2024/02/08 இலிருந்து 2024/02/28 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்துமூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு தலைவர்,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08**
**தொலைபேசி / பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையதளம் :- www.documents.gov.lk**
2024/02/06

---

## அரசாங்க அலுவலர்களின் நலன்புரி சங்கம் (GOBA)

### 115 ஆவது வருடாந்த நிறைவு தொடர்பாக அஅநச அங்கத்தினர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் வருடாந்த புலமைப்பரிசில்கள் – 2024

2024.04.30 ஆம் திகதியன்று 5 வருட அங்கத்துவத்தை பூர்த்தி செய்துள்ள அங்கத்தினர்களின் பிள்ளைகளுக்கு வருடாந்தம் வழங்கப்படும் பின்வரும் புலமைப்பரிசில்களுக்காக அரசாங்க அலுவலர்களின் நலன்புரி சங்கமானது விண்ணப்பங்களை கோருகின்றது.

1. 2022 க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமொன்றின் கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்பட்டிருத்தல்.
2. 2023 ஆம் ஆண்டின் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி மாவட்ட மட்டத்தில் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்காக www.goba.lk என்ற சங்கத்தின் இணையதளத்தை பார்வையிடவும்.

2024 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் தன்மையில் தபாலில் அனுப்பவும்.

**முகாமைத்துவ குழுவின் கட்டளைப் பிரகாரம்.**
**செயலாளர் மற்றும் கணக்காளர்**
**அரசாங்க அலுவலர்களின் நலன்புரி சங்கம்**

**த.பெட்டி 871, இல.: 65/1, அஅநச அவென்யு,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் 'ஏ' கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி:- 011-2434598, 2473577, 2473100**
**தொலைநகல்:- 011-2434212.** **மின்னஞ்சல்: info@goba.lk**
**2024 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று.** **இணையதளம்: www.goba.lk**

---

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை – கொழும்பு 10

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான 09 வகையான மாதிரிப் படிவங்களை அச்சிட்டு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அச்சிடல் வேலைகளுக்காக தகைமை வாய்ந்த பதிவு செய்துள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா வைப்பை 2024-02-27ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் மாதிரிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2024-02-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டப்ளியூ. கே. விக்கிரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு)

**எம்பிலிப்பிட்டிய L.F.S. இன் மிகுதி வேலைகள்**

**B/03/2024**

1. பின்வருமாறு விபரிக்கப்படுவதும் மற்றும் 05 மில்லியன் ரூபா (ஏறத்தாழ) மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்டதும் எம்பிலிப்பிட்டிய L.F.S இன் மிகுதி வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
2. இந்த வேலையின் நிர்மாணக்காலம் ஆறு (06) வாரங்களாகும்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மற்றும் ICTAD நிறுவனத்தின் C8 அல்லது C7 பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை (ரூபா 1,653.58 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தி எழுத்துமூலமான வேண்டுகோளின் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-02-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.
6. விலைமனுக்கள் 2024-03-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
7. தெளிவுபடுத்தல்கள் ஏதுமிருப்பின் 011-5455137 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திருமதி கங்கா குமாரி (பொறியியலாளர்) அவர்களை தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொ.பே. 5455335, தொலைநகல்: 5455424**

---

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### டயர்கள் வழங்குதல்

**B/04/2024**

டயர்களை வழங்குவதற்காக கீர்த்திவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் கோருகின்றார்.
ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமை மூலப்பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 ரூபாவை (ரூ. 1,653.58 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தியதன் பின் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-02-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.
சகல விலைமனுக்களுடன் 100,000.00 ரூபா தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
விலைமனுக்கள் 2024-03-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
தெளிவுபடுத்தல்கள் ஏதுமிருப்பின் 011-2253376 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திரு. மலிந்த ருக்மால், அதிகாரி (விமான சேவைகள்) அவர்களை தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடுகள்,**
**1ஆம் தளம், இல. 01 ஆவது மாடி,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455331 தொலைநகல்: 011-5455424**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு(IFB)

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (எரிசக்தி அமைச்சு)

**யாழ்ப்பாணத்திலுள்ள இபெகூ பிராந்திய அலுவலகத்திற்கு 25 KVA Sound Proof டீசல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல்**

**B/05/2024**

"யாழ்ப்பாணத்திலுள்ள இபெகூ பிராந்திய அலுவலகத்திற்கு 25 KVA Sound Proof டீசல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல்" என்பவற்றிற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.
விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 ரூபாவை (ரூ. 1,653.58 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தியதன் பின் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2023-11-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.
விலைமனுக்கள் 2024-03-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். விலைமனுக்களுடன் 50,000.00 ரூபா தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
தெளிவுபடுத்தல்கள் ஏதுமிருப்பின் 011-5455142 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திரு. பிரியந்த போபுகல, பொறியியலாளர் (மின்சாரம்) அவர்களை தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடுகள்,**
**1ஆம் தளம், இல.**
**01 ஆவது மாடி,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455331 தொலைநகல்: 011-5455424**

---

## பெறுகை அறிவித்தல்

### மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**மத்தள, விமான சேவைகள் எரிபொருள் மீள்நிரப்பல் முனையத்திற்கு பிளவு வகையான வளிச்சீராக்கிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்**

**B/06/2024**

மத்தள, விமான சேவைகள் எரிபொருள் மீள்நிரப்பல் முனையத்திற்கு பிளவு வகையான வளிச்சீராக்கிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.
விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 ரூபாவை (ரூ. 1,653.58 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தியதன் பின் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-02-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.
விலைமனுக்கள் 2024-03-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
விலைமனுக்களுடன் 55,000.00 ரூபா தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
தெளிவுபடுத்தல்கள் ஏதுமிருப்பின் 011 5455133 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிரதி முகாமையாளர் (பொறியியல் மற்றும் பிரேம்) அவர்களை தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடுகள்,**
**1ஆம் தளம், இல.**
**01 ஆவது மாடி,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455331 தொலைநகல்: 011-5455424**

---

**மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்**

| | |
|---|---|
| வழக்கு இலக்கம் | : CHC/06/24 CO |
| தன்மை | : நிறுவனம் |
| நடைமுறை | : பொது |
| பெறுமதி | : 29,000,000/- |

2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கம்பனிகளை ஒடுக்குதல் விதிகளின் கீழ் பின்வரும் நிறுவனத்தை கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

Lankaila (Private) Ltd bearing PV Number 00260897
பீகொக் பீச் ஹோட்டல், திஸ்ஸ வீதி,
ஹம்பந்தோட்டை

திலினி கல்பனா குருகே
இல. 220/A, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு-07

மனுதாரர்.

மேற்படி நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2024 ஜனவரி மாதம் 16ஆம் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வாணிப மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் (குடியியல் அதிகார எல்லைக்குள்) நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2024 மார்ச் மாதம் 27ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி அநுராத செனரத் வேரகொடை மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்:-
அநுராத செனரத் வேரகொடை
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி
இல. 41/1/2, பெல்மன்ட் வீதி, கொழும்பு-12

குறிப்பு:- அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்துமூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும்முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2024 மார்ச் மாதம் 26ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.



ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியின் 80 ஆம் வருட குழுவினரால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையிலான ஒக்போர்ட் ஜனாதிபதி கிண்ண போட்டியின் ஆரம்ப விழா கொழும்பு சுகததாச அரங்கில் கடந்த சனிக்கிழமை (03) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த பங்கேற்றதோடு முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார். இந்த நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் பிரபாத் ஜயசூரிய முன்னேற்றம்



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை சுழற்பந்து விச்சாளர் பிரபாத் ஜயசூரிய ஐ.சி.சி. டெஸ்ட் பந்துவீச்சாளர் தரவரிசையில் மூன்று இடங்கள் முன்னேறி ஆறாவது இடத்தை பிடித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி நிறைவடைந்த டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரபாத் ஜயசூரிய இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்து ஆட்ட நாயகன் விருதை வென்றதோடு இலங்கை அணியின் வெற்றிக்கும் உதவினார்.

இதன்மூலம் அவரது ஐ.சி.சி. தரவரிசை புள்ளிகள் 783 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜெஸ்பிரிட் பூம்ரா டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

இதன்போது அவர் சக அணி வீரரான சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்தர் அஷ்வினை பின்தள்ளியே முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். பந்துவீச்சாளர்களுக்கான ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்த முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளராகவும் அவர் பதிவாகியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக விசாக்கில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் அவர் மொத்தம் 9 விக்கெட்டுகளை வீழ்த்தியே முதல் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் இந்தத் தரவரிசையில் முதலிடத்தை தக்க வைத்த அஷ்வின் தற்போது 3 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். பதிலாக தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா இரண்டாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் கேன் வில்லியம்சன் முதலிடத்தை தக்கவைப்பதோடு ஆப்கானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சதம் அடித்த அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் 4 இடங்கள் முன்னேறி 24 ஆவது இடத்தை பிடித்தார்.

# அறபா லெஜன்ட் – ஏ வெற்றி

*ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்*



இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பாலமுனை அல்–அறபா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் அறபா லெஜன்ட் –ஏ அணி வெற்றி பெற்றது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அறபா லெஜன்ட்–பீ அணியினர் 10 ஓவர் நிறைவில் 3 விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலெடுத்தாடிய அறபா லெஜன்ட் –ஏ அணி 8.4 ஓவர் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்று சுதந்திர வெற்றி கிண்ணத்தை வென்றது.

# பாகிஸ்தானில் இரட்டை குண்டு வெடிப்பில் 22 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பலுகிஸ்தான் மாகாணத்தில் நேற்று (07) இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்பில் குறைந்தது 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் சுயேச்சை வேட்பாளர் ஒருவரின் கட்சி அலுவலகத்திற்கு முன்னால் இடம்பெற்ற முதல் குண்டு வெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து 150 கிலோமீற்றருக்கு அப்பால் இடம்பெற்ற இரண்டாவது குண்டு வெடிப்பில் மேலும் 10 பேர் பலியாகியுள்ளனர்.

ஜமைத்துல் உமாவே இஸ்லாம் கட்சி தேர்தல் அலுவலகத்தை இலக்கு வைத்து கிலா சைபுல்லா நகரின் பிரதான சந்தையில் இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றிருப்பதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் இன்று பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு வன்முறை அதிகரித்துள்ளது. இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை. வாக்குப் பதிவு திட்டமிட்டபடி இடம்பெறும் என்று பலுகிஸ்தான் அரசு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவுடன் முடிவுக்கு வந்த நிலையில் வாக்குப் பதிவு உள்ளூர் நேரப்படி இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் 128 மில்லியன் மக்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# பலஸ்தீன நாடு இல்லாது இஸ்ரேலுடன் உறவில்லை

### சவூதி அரேபியா திட்டவட்டம்



கிழக்கு ஜெரூசலத்துடன் அங்கீகரிக்கப்பட்ட 1967 எல்லைகளுடனான பலஸ்தீன சுதந்திர நாடு ஒன்று உருவாக்கப்படும் வரை இஸ்ரேலுடன் எந்த இராஜதந்திர உறவும் இல்லை என்று அமெரிக்காவிடம் சவூதி அரேபியா தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியா மற்றும் இஸ்ரேல் இராஜதந்திர உறவை ஏற்படுத்துவதில் சாதகமான பதில் கிடைத்திருப்பதாக வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு பேச்சாளர் ஜோன் கிர்பி செவ்வாயன்று (06) கூறியிருந்தார்.

இதனையடுத்தே பலஸ்தீன விவகாரம் தொடர்பில் சவூதி தனது நிலைப்பாட்டை வெளியிட்டு அமெரிக்காவுக்கு பதிலளித்துள்ளது. கடந்த 2020இல் இஸ்ரேலுடன் வளைகுடா அண்டை நாடுகளான ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பஹ்ரைன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தியதை அடுத்து சவூதியும் இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்துவது தொடர்பில் தீவிர பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தன.

மத்திய கிழக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் சவூதி சென்று அந்நாட்டு முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மானை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# மகன் துப்பாக்கிச் சூடு: குற்றவாளியானார் தாய்



பாடசாலையில் தனது மகனின் துப்பாக்கிச் சூட்டை தடுப்பதற்கு தவறியதாக அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் குற்றங்காணப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் தனது குழந்தையினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்காக குற்றங்காணப்படும் முதல் தாயாக 45 வயது ஜெனிபர் கிரம்ப்லி பதிவாகியுள்ளார்.

தனது மகன் துப்பாக்கி வைத்திருந்ததற்கு அனுமதித்தது மற்றும் அச்சுறுத்தல்களை அலட்சியம் செய்ததாக வழக்குத் தொடுநர்கள் ஜெனிபர் மீது குற்றம்சாட்டினர். இது தொடர்பில் அவரது கணவரும் தனியாக வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்துள்ளார்.

கடந்த 2021 நவம்பர் மாதம் மிச்சிகனில் உள்ள ஒக்ஸ்போர்ட் உயர் பாடசாலையில் தனது சக வகுப்பறை மாணவர்கள் நால்வரை சுட்டுக் கொன்றதற்கு இவர்களது 17 வயது மகன் ஆயுள் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

விருப்பாற்றலுக்கு உட்படாத நான்கு கொலைகளில் ஈடுபட்டதாகவே ஜெனிபர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொன்றுக்கும் அதிகபட்சமாக 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

# காசா போர் நிறுத்த முன்மொழிவுக்கு ஹமாஸ் பதில்: 135 நாட்களில் போரை முடிக்க பரிந்துரை

### ரபாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் அதிகரிப்பு

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான முன்மொழிவுக்கு ஹமாஸ் அமைப்பு பதிலளித்துள்ள நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான வேறுபாடுகளை களைவதில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்கள் இராஜதந்திர முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

பாரிசில் அமெரிக்கா, இஸ்ரேல், எகிப்து மற்றும் கட்டார் அதிகாரிகள் ஒரு வாரத்திற்கு முன்னர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து பரிந்துரைக்கப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டை பரிசீலித்த ஹமாஸ் அமைப்பு நேற்று முன்தினம் (06) அதற்கான பதிலை அளித்ததாக குறிப்பிட்டது.

இதில் ஹமாஸின் பதில் தொடர்பான விபரம் வெளியிடப்படவில்லை. எனினும் அந்த அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில், "நீடித்த மற்றும் முழுமையான போர் நிறுத்தம், எங்கள் மக்கள் மீதான ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருதல், நிவாரணம், தங்குமிடம் மற்றும் புனரமைப்பை உறுதி செய்தல், காசா முற்றுகையை நீக்குதல் மற்றும் கைதிகள் பரிமாற்றம் ஒன்றை அடைவதை உறுதி செய்யும் வகையில் சாதகமான பதில் ஒன்று அளிக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இராணுவத்தினர் அல்லாத சில பணயக் கைதிகளை விடுவித்து கைதிகள் பரிமாற்றம் மற்றும் காசாவுக்கு உதவிகளை விநியோகிக்கும் வகையில் 45 நாள் போர் நிறுத்தம் ஒன்றை ஹமாஸ் பரிந்துரைத்திருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முன்மொழிவின் இரண்டாவது கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையான பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக இஸ்ரேலிய ஆண் பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேலிய படைகள் முழுமையாக வாபஸ் பெறுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஹமாஸின் பதில் முன்மொழிவு ஒவ்வொன்றும் 45 நாட்கள் நீடிக்கும் மூன்று கட்டங்களை கொண்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதன்படி 135 நாட்களுக்குள் அனைத்து கைதிகளும் விடுவிக்கப்பட்டு காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறப்பட்டு போரை முடிவுக்குக் கொண்டுவருவதாக அமையும்.

ஹமாஸின் இந்த பதில் முன்மொழிவு கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அதனை இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் மதிப்பீடு செய்து வருவதாகவும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று (07) அறிவித்தது.



அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் போர் வெடித்த பின் ஐந்தாவது முறையாக மத்திய கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருப்பதோடு, நேற்று அவர் இஸ்ரேலை சென்றடைந்தார். ஹமாஸின் பதில் குறித்து இஸ்ரேல் அதிகாரிகளுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கட்டார் சென்ற அவர், "இன்னும் வேலைகள் உள்ளன என்றாலும் உடன்படிக்கை ஒன்று சாத்தியம் என்றும் அது அவசியம் என்றும் நாம் தொடர்ந்து நம்புகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஹமாஸின் பதிவை கட்டார் "சாதகமானது" என்று விபரித்திருப்பதோடு, ஹமாஸ் நெகிழ்வுத் தன்மையை காண்பித்திருப்பதாக எகிப்து பாதுகாப்பு தரப்பினர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

"முடியுமான விரைவில் இறுதி உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் முன்மொழியப்பட்ட கட்டமைப்பின் அனைத்து விபரங்கள் தொடர்பிலும் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம்" என்று எகிப்து தகவல் சேவையின் தலைவர் தியா ரஷ்வான் தெரிவித்துள்ளார்.

ஹமாஸின் பதில் உடன்படிக்கை ஒன்றை நோக்கி "நகர்வதாக உள்ளது" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார். எனினும் உடன்படிக்கை ஒன்றை எட்டும் பொருட்டு ஹமாஸ் அல்லது இஸ்ரேல் தனது கடுமையான நிலைப்பாட்டில் இருந்து விலகிச் செயற்படுமா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு காசாவில் இருந்து இஸ்ரேலியப் படை வாபஸ் பெறும் வரை தமது பிடியில் இருக்கும் பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்காது என்று அந்த அமைப்பின் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செவ்வாயன்று (06) செய்தி வெளியிட்டிருந்தது.

முறுபுறம் ஹமாஸ் அமைப்பு ஒழிக்கப்படும் வரை காசாவில் போர் நடவடிக்கையை நிறுத்தப் போவதில்லை என்று தொடர்ந்து கூறி வரும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்குவதையும் நிராகரித்து வருகிறார்.

*ரபாவை நெருங்கும் போர்*

எனினும் காசா போர் நான்கு மாதங்களை தாண்டி நீடிப்பதோடு இஸ்ரேலியப் படை தற்போது எகிப்து எல்லையை ஒட்டி ரபா பகுதி மீது தாக்குதல்களை அதிகரித்துள்ளது. இது பெரும் எண்ணிக்கையான மக்கள் அடைக்கலம் பெற்றுவரும் அந்த சிறிய நகரை நோக்கி இஸ்ரேலியப் படை முன்னேறும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது.

இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்றுக் காலை இந்த நகர் மீது சரமாரி தாக்கதல்களை நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக பொலிஸ் சின்னத்துடன் சென்ற கார் வண்டி ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய ஷெல் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

ரபாவின் கைர்பாத் அல் அதாஸ் பகுதிக்கு மாவு கொண்டு செல்லும் உதவி லொறிக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இந்த பொலிஸ் வண்டி சென்றதாக பார்த்தவர்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமாக ரபாவில் தற்போது 1.4 மில்லியன் பலஸ்தீனர்கள் தஞ்சமடைந்துள்ளனர். இந்தப் பகுதி முன்னர் இஸ்ரேலிய இராணுவத்தால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இஸ்ரேலியப் படை தற்போது இந்த நகரை நோக்கி முன்னேற தயாராகி வருவதாக அஞ்சப்படுகிறது. இது ஆயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்புக்குக் காரணமாகக் கூடும் என்று உதவிப் பணியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேநேரம் வடக்கு காசாவின் ஜபலிய அகதி முகாமில் இஸ்ரேலி நடத்திய தாக்குதல்களில் இருபது பொதுமக்கள் கொல்லப்பட்டு மற்றும் காயமடைந்ததாக வபா கூறியது.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் உள்ள ஹனாவி பாடசாலையை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய செல் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக அங்குள்ள வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நான்கு மாதங்களை தாண்டியுள்ள காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 28 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இதில் பெண்கள் மற்றும் சிறுவர்களே பெரும்பான்மையாக உள்ளனர்.

காசாவில் 11,000க்கும் அதிகமான நோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் உயிரை காப்பதற்கு வெளிநாட்டில் அவசர சிகிச்சை வழங்கப்பட வேண்டி இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் வான், தரை மற்றும் கடல் வழியாக நடத்தி வரும் தாக்குதல்களில் சுமார் 70,000 பேர் காயமடைந்துள்ளனர். எனினும் சிலர் மாத்திரமே எகிப்துடனான ரபா எல்லை கடவை வழியாக காசாவில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. குறிப்பாக ஈராக் ஆதரவு போராட்டக் குழுக்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருப்பதோடு அமெரிக்காவின் பதில் தாக்குதல்கள் வன்முறையை அதிகரித்துள்ளது.

மத்திய சிரிய நகரான ஹோம்ஸில் இஸ்ரேல் நேற்று (07) நடத்திய வான் தாக்குதல்களில் ஆறு பொதுமக்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாக கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் ஒன்றில் கட்டடம் ஒன்று தரைமட்டமாக்கப்பட்டிருப்பதோடு ஈரான் ஆதரவு குழுக்களை இலக்கு வைத்து மேலும் பல இடங்களில் தாக்தல்கள் இடம்பெற்றிருப்பதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகத்தின் தலைவர் ரமி அப்துல் ரஹ்மா ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 8ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.